

www.tamilarangam.net

# "இரக்கமில்லாமல் நடந்து கொள்வதன் மூலமாக மட்டுமே கோழைத்தனம் சுறுசுறுப்பாக இருக்க முடியும்."



பி.இரயாகரன்

www.tamilcircle.net



மக்களுக்கு பயந்து நடுங்கும் கோழைகளின் பாசீச சட்டங்களையும் ஒழுக்கங்களையும், மார்க்ஸ் அழகாகவே இப்படி எள்ளி நகையாடுகின்றார். மனித வரலாறுகளில் அஞ்சி நடுங்கக் கூடிய பாசிட்டுகள் அனைவரும் விதிவிலக்கின்றி, தமது கோழைத்தனமான ஆட்சி அதிகாரத்தை இரக்கமற்ற பாசீச வழிமுறைகளில் தான், தமது சொந்த வீரத்தை நிலைநாட்டுகின்றனர். மக்களின் முதுகுத் தோலை உரித்து, அதை செங்கம்பளமாக்கி அதன் மேல் தான் எப்போதும் வீரநடை போடுகின்றனர்.

இலங்கையில் பாசீசப் புலிகள், தேசிய வீரர்களாக வீரநடை போடும் கதையும் இப்படித்தான். ஈவிரக்கமற்ற, கோழைத்தனமான படுகொலைகள் சித்திரவதைகள் மூலம், பல ஆயிரம் சமூகப் பற்றாளர்களை கொன்று ஒழித்தனர், ஒழிக்கின்றனர். நாள் தோறும் படுகொலைகள் சித்திரவதைகள் மூலமே, தமது மக்கள் விரோத பாசீச ஆட்சியை தக்க வைக்கின்றனர். மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கையை உள்ளடக்கி எழுந்த தேசியத்தை, துப்பாக்கி முனையில் அடக்கியொடுக்குகின்றனர். இதன் மூலம் தேசிய அடிப்படைகளை திரித்து, அதில் தான் தம்மை போராடும் சக்தியாக நிலைநிறுத்த முனைகின்றனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கோரிக்கையை முன்வைப்பதன் மூலம், இந்த போராட்டத்தில் ஊன்றி நிற்பதாக காட்டுகின்றனர். இதற்கு அறிவியல் சூனியத்தை சமூகமயமாக்கி, அதில் தம்மை தாம் நிலை நாட்டுகின்றனர். இதற்காக மக்களின் இரத்தத்தையும், அவர்களின் உடல் உழைப்பையும் உறுஞ்சி வாழும் புலிகள்,

www.tamilarangam.net



அர்த்தமற்ற தியாகங்களை கேடுகெட்ட வகையில் தமது கோழைத்தனமான அரசியலுக்காக பலியிடுகின்றனர்.

மாபியா குழுக்களுக்குரிய லும்பன் கொள்கையை அடிப்படையாக கொண்ட வாழ்க்கை முறையுடன் இணைந்த புலிகள், பாசீசத்தை தமது அரசியலாக்கி அதையே ஆணையாக கொள்கின்றனர். இதற்காக எமது மண்ணில் பல ஆயிரம் உயிர்களை ஈவிரக்கமற்ற வழிகளில் கொன்று, அந்த இரத்ததை தமது கால் பாதங்களில் தெளித்தே தம்மைத் தாம் புனிதப்படுத்துகின்றனர். இந்த புனிதமான பாசீச இருப்பை மூடிமறைக்க, பினாமிய பிழைப்பு வாதங்கள் வக்கிரப்படுகின்றன. மாற்றுக் கருத்தை துப்பாக்கி முனையில் அடக்கி ஒடுக்கி வைத்த பின் தான், தேசிய பாசிட்டுகளால் அனைத்தையும் வக்கிரமாக நியாயப்படுத்த முடிகின்றது. இப்படி நியாயப்படுத்திய புனிதத்தைப் பற்றி, கோழைகள் தமது பாசீச வழிகளில் வீர வசனங்களை பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் மாற்றுக் கருத்துகள் மீதான தனிநபர் அரசியல் படுகொலைகள் மட்டும் தான், புலிகளை பாதுகாப்பதற்கான ஒரேயொரு அரசியல் மார்க்கமாகிவிட்டது. தமிழ்மக்களின் போராட்டத்தின் ஊடான அரசியல் தலைமையை நிறுவுவதற்கு பதில், படுகொலை அரசியல் வழியில் மட்டுமே தமது சர்வாதிகார மக்கள் விரோத தலைமையை தக்கவைக்கின்றது. இந்த பொதுத் தன்மையில் புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்து என்பது, தப்பித்துச் செல்லும் வழியில் தன்னை சந்தர்ப்பவாதமாக மாற்றி புரட்சிகர அரசியலை சிதைத்துள்ளது. புலிகளை அரசியல் ரீதியாக எதிர் கொள்ளமுடியாத, பூர்சுவா ஊசலாட்டத்தை அடிப்படையாக கொண்ட முதுகெலும்பற்ற போக்கு, மாற்றுக் கருத்தை மறுதளத்தில் வக்கிரமாகச் சிதைத்துள்ளது. இதைவிட துரோக குழுக்களாக, இனவாத அரசினதும் ஏகாதிபத்தியத்தினதும் நேரடி கைக்கூலிகளாக புலிக்கு வெளியில் ஸ்தாபன ரீதியாக ஒரு பகுதி அணிதிரண்டுள்ளது. இதற்கு புலிகளால் பாதிக்கப்பட்டவர்களினதும், போராட்டத்தில் இருந்து விலகி வாழும் பூர்சுவா வர்க்கத்தினதும் பலமான மக்கள் அடித்தளமும் உண்டு.

நேரடியாக புலிகள் மற்றும் துரோகக் குழு அல்லாத பிரிவில் ஏற்பட்ட அரசியல் சிதைவால் ஏற்பட்ட சேதம், புலிகளின் படுகொலை அழிப்பை போன்ற மற்றொரு கோர வடிவமே. உதாரணமாக கம்யூனிசத்தை வெளியில் இருந்து அழிப்பது ஒருவகை. உள்ளிருந்து கோட்பாட்டு ரீதியாக அழிப்பது இன்னொரு வகை. இவை இரண்டும் சாரம்சத்தில் ஒரே தன்மை கொண்டவை. இந்த நிலையில் குறைந்த பட்சம் சமூகத்தை பகுத்தாயும் முறை, சமுகத்தை நேர்மையாக நேசிப்பது, அவர்களின் பல்வேறு பிரச்சனைகளில் தலையிடுவது, அதைப்பற்றி சிந்திக்க தூண்டுவது என்பதே எனது நோக்கம்.

எனது நோக்கம் அரசியலற்ற பெரும் தேசிய ஒடுக்குமுறைக்கு கோட்பாட்டில் சார்பு நிலையை கொண்டோருக்கும் சரி, இலங்கை அரசுடன் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் இணைந்து செயற்படுவோருக்கும் சரி, திட்டவட்டமாக எதிரானது. அவர்கள் யாரும் இதில் இருந்து அரசியலை வெட்டி கழித்தும், திரித்தும், பயன்படுத்துவதை, எந்தவிதத்திலும் எனது அரசியல் திட்டவட்டமாக அனுமதிக்கவில்லை.

தமிழ் பேசும் மக்கள் சிங்கள பெரும் தேசிய இன பாசீச ஒடுக்குமுறையை, அதன் காட்டுமிராண்டித்தனத்தை நேரடியாக சந்திக்கின்றார்கள். இதை எதிர்த்து போராடும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. இதை யாரும் கொச்சைப்படுத்தவோ, நிராகரிக்கவோ முடியாது. தமிழ் மக்களின் நியாயமான ஜனநாயக கோரிக்கையை ஆதரிக்க வேண்டியது, பெரும்பான்மை சிங்கள மக்களின் தேசியக் கடமை. தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் நியாயமான ஜனநாயக கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டியது தேசியக் கடமை. இப்படி எமது நாட்டில் பல்வேறு ஜனநாயகக் கடமைகள் மறுக்கப்பட்டு, கற்பழிக்கப்பட்டு உள்ள நிலையில், ஜனநாயகத்தை உயர்த்தி பாதுகாக்கும் போராட்டத்தில் ஈடுபடுவது அனைத்துத்தரப்பினதும் அவசரக் கடமையாக உள்ளது.

www.tamilarangam.net



இன ஒடுக்குமுறையை சிங்கள இனப் பெரும் தேசியவாதம் மூலம் முன்னெடுத்து, ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதல் விரிவாக்கத்தை நடைமுறைபடுத்தவும், வர்க்கப் போராட்டத்தை தடுக்கும் எல்லைக்குள்ளும் தான், இந்த இனவாதத்தை உயிருள்ள நடைமுறையாக இனவாதிகள் வைத்துள்ளனர். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் சுயநிர்ணய உரிமையை பெறப் போராடுவது, அவர்களின் அடிப்படை உரிமையாகும். இந்த உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும், தடுத்து நிறுத்தவும் எடுக்கும் அனைத்து வகையான நிலைப்பாடுகளுக்கு எதிராகவும், தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை இன்று தொடர வேண்டியது அவசரக் கடமையாக இருக்கின்றது. இது கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் கூட ஒரு போராட்டத்தை ஈவிரக்கமின்றி நடத்த வேண்டியிருந்தது, வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை எதிர்த்து அழிக்க முனைந்த போதெல்லாம், எந்தளவுக்கு அதை கடுமையாக எதிர்த்து போராட வேண்டியிருந்ததோ, அதேயளவுக்கு இந்த சுயநிர்ணயத்தை திரித்து பயன்படுத்திய பிரிவுகளையும் எதிர்த்து போராடுவதில் சமரசம் என்பதே கிடையாது.

## சிறுபான்மை தேசிய இனங்களுக்கு எதிரான சிங்கள பாசீச பெருந்தேசிய இனவாதம்

இலங்கையில் இனவாதம் என்பது காலனித்துவ வரலாற்றுடன், வரலாற்று தொடாச்சியுடையது. பிரிட்டிஸ் காலனித்துவவாதிகள் இலங்கையை தனது ஆக்கிரமிப்பின் ஊடாக, செல்வத்தையும் உழைப்பையும் சூறையாடிய வரலாற்று வளர்ச்சியிலேயே, இந்த இனவாத நாற்று பிரித்தாளும் தந்திரம் மூலம் ஊன்றப்பட்டது. தேசிய வளங்களைச் சார்ந்து வாழ்ந்த மக்களின் வாழ்வை பறித்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள், மக்களின் கோபத்துக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. கோபம் போராட்டமாக வளர்ச்சி பெற்றபோது, அதற்கு தலைமை தாங்கிய பிரிவுகள் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுவதற்கு பின்வாங்கினர். அவர்கள் போராட்டத்தை நடத்துவதாக காட்டியபடியே, பிரிட்டிஸ் அரசுடன் கூடிக்குலாவியபடி நக்கித் திரிந்தனர். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கோபத்தை திசை திருப்பவும், உழைக்கும் மக்களின் போராட்டங்கள் சுயமாக வளர்ச்சி பெறுவதை தடுக்க இனவாதத்தை பிரிட்டிஸ் காலனித்துவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து மூலதனமாக்கினர். இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை பிரிட்டிஸ் காலனித்துவவாதிகள் வழங்கிய கதகதப்பான கம்பளங்களில் வசதியாக உறங்கியபடியே வளர்த்தெடுத்தனர். இந்த இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து இனப் பிரிவுகளையும், தமது சொந்த வர்க்க நலன்களை அடிப்படையாக கொண்டு மக்களைப் பிரித்துப் பிளந்தனர். இதன் மூலம் பிரிட்டிஸ் காலனித்துவ வாதிகளுடன் ஒரு முரண்பாடற்ற நட்புறவுகளை, இனம் கடந்து தமக்குள் பேணினர். பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை திசை திருப்பும் வகையில், இனமுரண்பாட்டை அடிப்படையாக கொண்ட நடவடிக்கைகளையும், இனக் கலவரங்களை காலத்துக்கு காலம் நடத்தினர்.

இந்த வகையில் உருவான இனம் சார்ந்த பிரிட்டிஸ் ஆதரவு இனவாத தலைமைகளை அடிப்படையாக கொண்டு, இலங்கைக்கு போலிச் சுதந்திரத்தை தங்கத் தட்டில் வைத்து பிரிட்டிஸ் காலனித்துவவாதிகள் கையளித்தனர். இந்த சுதந்திரம் பெற்றுப்போட்ட கள்ளக் குழந்தையான ஜனநாயகம், பிரிட்டிஸ் காலனித்துவ நலன்களை பாதுகாக்க சபதம் ஏற்றது. போலிச் சுதந்திரத்தில் ஆட்சி ஏறிய ஏகாதிபத்திய இனக் கைக்கூலிகள், ஆரம்பம் முதலே இனவாதத்தை அடிப்படையாக கொண்டே ஆட்சி அமைப்பை நிறுவினர். இனவாத நடவடிக்கைகளே ஆட்சி அமைப்பின் மக்களுக்கான வாக்குறுதியாகி, அதுவே அரசியல் கொள்கையாகின. பாட்டாளி வர்க்கத்தின் கூர்மையான வர்க்கப் போராட்டங்கள் எழுந்த எழுகின்ற நிலமையை தடுக்க, இனவாதத்தை அடிப்படையாக கொண்டு சமூகத்தை பிளப்பது அவசியமானதாகவும் நிபந்தனையானதாகவும் ஆளும் வர்க்கத்துக்கு இருந்தது. இந்த இனவாதத்தில் யார் அதிகமாக இனவாதத்தை அரசியலாகக் கொள்கின்றார்களோ, அவர்களே அரசு அமைக்க முடியும் என்றளவுக்கு இலங்கை சமூகங்களிடையே இனவாத கருத்தும் கண்ணோட்டமும் புகுத்தப்பட்டது. ஒரு இனத்தை ஒடுக்கி

www.tamilarangam.net



மற்றைய இனத்துக்கு நிபந்தனையின்றி வழங்கும் சலுகைகள், தேர்தல் வெற்றியாகியது. ஆட்சியில் தொடர்ந்து இருந்த பெரும் சிங்கள தேசிய இனவாதத்தை எதிர்த்து, சிறுபான்மை இனங்கள் தமது நலன்களை தக்கவைக்கும் வகையில் தன்னை நிலைநிறுத்தியது. அதேநேரம் சிங்கள இனவாதத்தை எதிர்த்தும், சிங்கள மக்களுடன் ஐக்கியத்தை முன்னிறுத்தியும் போராட வேண்டிய நிலையில், அதை தவிர்த்து தமிழ் குறுந்தேசிய இனவாதத்தை சிறுபான்மை தலைமைகள் முன்வைத்தன. இங்கும் முஸ்லிம் மற்றும் மலையக மக்களை, தமிழ் குறுந்தேசிய இனவாத பெரும் பூர்சுவா வர்க்க கண்ணோட்டத்தில் ஒடுக்கியபடியே தேசியத்தை முன்வைத்தனர். இதன் மூலம் இலங்கையில் இனவாதத் தலைவர்கள், இனம் கடந்த நிலையில் தமது வர்க்க நலன்களை பெறுவதில் ஒன்றுபட்டனர். இந்த ஒன்றுபடுதல் என்பது சுரண்டும் வர்க்க கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்டே இருந்தது. அந்த வகையில்

1. சொந்த தனிப்பட்ட வர்க்க நலன்கள் மற்றும் தமக்கு சார்பானவர்களின் வர்க்க நலன்களை அடைவதில் இனவாத எல்லையை கடந்து தமக்குள் ஒன்றுபட்டு நின்றனர்.

2. ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் அனைத்து வர்க்கப் போராட்டத்தையும் ஒடுக்குவதில், இனவாதம் கடந்து தமக்குள் ஒன்றுபட்டு நின்றனர்.

3. சிறுபான்மை தேசிய இனங்கள் தொடங்கி படிநிலை சாதியப் பிரிவுகள் மற்றும் பெண்கள் மீதான ஒடுக்கு முறையைச் செய்வதில் இனவாதம் கடந்து தமக்குள் ஒன்றுபட்டு நின்றனர்.

4. மற்றைய இனத்துக்கு எதிரான இனவாத கண்ணோட்டத்தை உருவாக்குவதில் தமக்கு இடையில் ஒன்றுபட்டு நின்றனர். மற்றைய இனத்துடன் ஐக்கியப்படும் அனைத்து போக்கையும் எதிர்த்து நின்றதுடன், அதை ஒடுக்குவதில் இவர்கள் இனம் கடந்த வகையில் ஐக்கியப்பட்டு நின்றனர்.

5. இவர்கள் இனம் கடந்த வகையில், கட்சி முரண்பாடு கடந்த நிலையில், காலனிய நலன்களை பேணுவதிலும், ஏகாதிபத்திய நலன்களை விரிவாக்குவதிலும் தமக்குள் ஒன்றுபட்டு நின்றனர்.

6. இனவாதத்தை தமது அரசியலாகவும் நடைமுறையாகவும் கொண்டு இருப்பதில், கோட்பாட்டு ரீதியாக ஒன்றுபட்டு நின்றனர். இந்த இனவாதமே பரஸ்பரம் அவர்களின் இருப்பை பாதுகாக்கும், ஒரே அரசியல் அடிப்படையாக இருப்பது இதன் வெட்டுமுகத் தோற்றமாகும்.

7. இனவாதத்தை பரஸ்பரம் எதிர் நிலையில் முன் வைப்பதன் மூலம், ஏகாதிபத்தியத்துக்காக காவடி எடுப்பதில் ஐக்கியப்பட்டு நின்றனர்.

இனவாதத்தை தொடர்ச்சியாக விதைத்தபடி பல்வேறு இனப்பிரிவுகள் தமக்கிடையில் முரண்பாட்டுடன் தம்மையும், தமது நலன்களையும் பேணியபடி ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசம் இருந்தனர், இருக்கின்றனர். இலங்கை தேசிய பொருளாதாரத்தை மேலும் மேலும் தொடர்ச்சியாக அழித்து அதை ஏகாதிபத்தியத்துக்கு தாரைவார்த்து கொடுப்பதன் மூலம், உள்நாட்டில் வர்க்க நெருக்கடி தொடர்ச்சியாக அதிகரித்தது. வர்க்கங்களுக்கு இடையில் ஏற்படும் வர்க்க கொந்தளிப்பு ஒரு வர்க்கப் போராட்டமாக மாறிவிடுகின்ற நிலையில், அதை சிதைப்பது ஆளும் மற்றும் ஏகாதிபத்திய நலனுக்கு அவசியமான நிபந்தனையாகும். இதை சிதைக்க இனவாதத்தை விரிவாக்குவதன் மூலம், மக்களுக்கிடையில் இனமோதலை தூண்டி, அதையே பிரதான சமூக முரண்பாடாக்குவது இனவாதிகளின் கருத்தும் கண்ணோட்டமாகவும் இருந்தது. இதில் ஆளும் வர்க்கங்கள் வெற்றி பெற்றன. இனவாதமே வர்க்கங்களை அடக்கியாளும் ஒரு சுரண்டும் கருவியாகியது.

www.tamilarangam.net



இந்த வகையில் இனவாதத்தை பெரும் சிங்கள இனவாதம் விரிவாக்கிய வரலாற்றில், சிறுபான்மை தலைமைகளும் அக்கம் பக்கமாக அதே இனவாதத்தை ஆதாரமாக கொண்டது. சிங்கள இனவாத அரசையும் அன்னிய ஏகாதிபத்திய சூறையாடலையும் பாதுகாத்தபடி, தனது தரகு மற்றும் நிலபிரபுத்துவ நலன்களையும் பேணினர். இந்த இனவாத தலைமைகளின் இனவாத கண்ணோட்டம் மீதான எதிர்ப்பும் ஐக்கியமும், தவிர்க்க முடியாதபடி இனவாத வடிவத்துக்குள்ளேயே வெடிப்பை ஏற்படுத்தியது. சொந்த இனவாத சக்திகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், வர்க்க நலன்களின் அடிப்படையில் மற்றைய இனவாத வர்க்க தலைமையுடன் கூடிக் குலாவுவதையும் வர்க்க நலன்களை அடைவதையும், அடைய முயல்வதையும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. இனவாதத்தை பேணவும், தீவிரமாகவும் முன்னெடுக்கத் தவறியவர்களை துரோக சக்தியாக வரையறை செய்தது. பெரும்பான்மை இனமும், சிறுபான்மை இனமும் தமது இனவாதத்தின் உள் முரண்பாட்டால் தமக்குள் தொடர்ச்சியாக பிளவாகி, புதிய தீவிர இனவாத கட்சிகளையும், அரசியல் சட்ட அமைப்புகளையும், இனவாத நடைமுறைகளையும் தொடர்ச்சியாக மாறிமாறி கொண்டுவந்தது, வருகின்றது. இது இனவாதத்தை நவீனமாக்கி ஒடுக்கு முறையை தீவிரமாக்கியது. மறுதளத்தில் சிறுபான்மை இனவாதத் தலைமை வர்க்க நலன்களை அடிப்படையாக கொண்டு பெரும்பான்மை இனத்துடன் கூடிக் கூலாவுவதை, புதிய தீவிர இனவாத சக்திகள் துரோகமாக வரையறுத்தது. அதே நேரத்தில் சமூகத்தில் எந்த வகையில் போராடிக் கொண்டிருக்கின்றதோ, அதன் எல்லைக்குள் அதன் போக்கில் முத்திரை குத்தப்பட்ட துரோகத்தை பழி தீர்த்துக் கொள்கின்றது. இது தனிநபர் படுகொலை வரை நீண்டு கிடக்கின்றது. இந்த இனவாதம் ஆழமான தீவிர குறுந்தேசிய இனவாதத்தை, ஆணையில் வைத்தது. இந்த குறுந்தேசிய இனவாதத்தின் வளர்ச்சி என்பது, தன்னைத் தான் தூய்மையானதாக பிரகடனம் செய்தபடி, மற்றைய அனைத்தையும் துரோகமாக வரையறுத்து அழித்தொழிக்கின்றது. அதேநேரம் தனது கருத்துக்கு மாற்றான அனைத்து கருத்தையும் சிந்தனையையும் நடைமுறையையும் கூட, துரோகமாக காட்டி அழித்தொழிக்கின்றது. இது மக்களின் நேரடி கருத்துச் சுதந்திரத்தை, தனது குறுந்தேசிய இனவாதத்துக்குள் துரோகமாக வரையறை செய்து அழித்தொழிப்பது என்பது இதன் பொதுப் பண்பாகியது, பொதுப் பண்பாகவுள்ளது.

இனவாத கட்டமைப்பு என்பது சமுதாய பிளவை ஆழமாக்கிச் சென்றது. மூலதனச் சுரண்டல் அமைப்பின் வர்க்க நலன்களை பாதுகாக்கவும், தனிப்பட்ட ரீதியில் சொகுசாக வாழும் வர்க்க நலன்களை பாதுகாக்கவும் இனவாதமே அடிப்படையாக உள்ளது. மூலதனத்தை பாதுகாக்கும் இனவாத தேசிய அரசியல் வாதிகளால் எண்ணை ஊற்றி வளர்த்த இனவாத தீ, ஒட்டு மொத்த சமுதாயத்தையும் இதற்குள் தள்ளிவிட்டு குளிர்காய்கின்றது. சிங்கள இனவாதப் பாசீசம், தமிழ் பேசும் மக்களையே தனது எதிரியாக காண்கின்றது. தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் என அனைத்தின் மீதும், அதன் அடையாளங்கள் மீதும் கூட தனது இனவாதத் தீயை பாய்ச்சுகின்றது. அதாவது இலங்கையின் இன முரண்பாட்டை முதன்மை முரண்பாடாக தள்ளி, அதற்குள் அனைத்தையும் திட்டமிட்டே அடக்கியொடுக்கின்றது. இனவாதத்தை அடைப்படையாக கொண்டு உருவாக்கிய அடக்குமுறைச் சட்டங்களை கொண்டே, சிங்கள மக்களையும் ஒடுக்குகின்றது. இயல்பாக எழுகின்ற இயற்கையான தொழிலாளர் போராட்டத்தைக் கூட, இந்த இனவாத அடக்குமுறை சட்டத்துக்குள் ஒடுக்கி சிறையில் தள்ளிவிடுகின்றனர். ஏன் தொழிலாளர்களின் வருடாந்த பொது விடுமுறைகளை கூட இனவாத அடிப்படையிலும் மத அடிப்படையிலும் பிளந்து அதை குறைத்து, சுரண்டும் மூலதன விருத்திக்கு சாதகமாக பயன்படுத்தவும் தவறவில்லை.

உலகமயமாதலின் விரிவாக்க நிபந்தனைகளை அமுல் செய்யும் போது, மொழி ரீதியாக கல்வி கற்பிக்கும் தமிழ் ஆசிரியர் எண்ணிக்கையை குறைப்பதை அடிப்படையாக கொண்டே இனவாதம் செயலாற்றுகின்றது. இனவாதத்தை அடிப்படையாக கொண்டு மக்களை பிளந்து சுரண்டும் வர்க்கத்தின் நலன்களை உறுதி செய்வதிலும், புதிய அடக்கு முறைகளை உழைக்கும் மக்களுக்கு எதிராக இனம் கடந்து ஏவிவிடுவதும், தொழிலாளர் உரிமைகளை பறிப்பதும், இந்த பிரதான முரண்பாட்டின் உள்ளடக்கமாகவும் சாரமாகவும் உள்ளது.

www.tamilarangam.net



இன்று சிறிலங்கா அரசு தனது சொந்த அதிகாரத்தை சிங்கள இனவெறி பாசீச கட்டமைப்பு சார்ந்து, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை வரைமுறையின்றி ஏவுகின்றது. அனைத்து தமிழ் மக்களையும் சிங்கள மக்களின் எதிரியாக காண்கின்றது, காட்டுகின்றது. தமிழ் மக்களின் பண்பாட்டு கலாச்சார அடையாளங்களை அடிப்படையாக கொண்டே தமிழ் மக்களை எதிரியாக அடையாளப்படுத்தவும், தனது இனவெறி அடக்குமுறையை ஏவிவிடவும் தயங்கவில்லை. தமிழ் கலாச்சாரம் மற்றும் மொழி அடையாளம் சார்ந்து தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்முறை மற்றும் கற்பழிப்பை தாராள மயமாக்கியுள்ளது. ஏகாதிபத்தியங்களின் துணையுடன் உலகமயமாதலை விரிவாக்கும் கட்டமைப்பில், இன ஒடுக்குமுறையை ஆதாரமாக அச்சாகவும் அடிப்படையாகவும் கொள்கின்றது. இந்த வகையில் இன யுத்தத்துக்கு ஆதரவாக ஏகாதிபத்தியங்கள் தூணாகி, துணை நிற்கின்றன. இந்த இனவாத அடக்குமுறைக்கு நிதி மற்றும் இராணுவ உதவிகளை வழங்கி வருவதுடன், நேரடி படை உதவி ஊடான ஆக்கிரமிப்பை செய்யவும் தயாராகவுள்ளது. குறுந்தேசிய நலன்களுக்காக போராடும் புலிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கை அரச சார்ந்து மிரட்டவும், தேவைப்பட்டால் ஆக்கிரமிக்கவும் ஏகாதிபத்தியங்கள் தயாராகவே உள்ளது.

1987 இல் இந்தியா ஆக்கிரமிப்பாளன் சிங்கள இனவாத அரசு சார்ந்து தமிழ் மக்களை ஒடுக்கும் வகையில் நடத்திய விஸ்தரிப்புவாத ஆக்கிரமிப்பு போன்று, அடுத்த கட்ட ஆக்கிரமிப்புக்கான தயாரிப்பில் உலகம் ஈடுபடுகின்றது. இன்று தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் உலகமே ஒரு கரமாகி வருகின்ற நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் நாம் ஊன்றி நிற்க, சர்வதேசியத்தை அதன் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொள்ளும் வரலாற்று கட்டத்தில் நிற்கின்றோம்.

**இனவாத யுத்தத்தில் மக்களின் அவலங்கள் முடிவின்றி பெருகுகின்றன**

தமிழ் மக்களின் மீதான தொடர்ச்சியான இனவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் போராடும் மக்கள், போராடும் உரிமையை சொந்த வலதுசாரி குறுந்தேசியவாதிகளான பாசீச புலிகளிடம் இழந்த பரிதாபம், போராட்டத்தினையே அர்த்தமற்றதாக்கி விட்டது. அண்ணளவாக 25000 பேர் (1.5.2001 இல்) அதாவது நேரடியாக இராணுவத்துக்கு எதிரான போராட்டத்திலும் உள் இயக்க ஜனநாயக போராட்டத்திலும் மாற்று இயக்க படுகொலைகள் (துரோகத்துக்கு முன்பாக) என்று, நேரடியான போராட்ட நடவடிக்கையில் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர். இது தொடர்கின்றது. 60000 முதல் 100000 வரையிலான மக்கள் இராணுவ அழித்தொழிப்பு, மற்றும் இயக்க படுகொலைகள், இனப்படுகொலைகள் என்ற எல்லைக்குள் தம் உயிரை இழந்துள்ளனர். தொடர்ந்தும் இழக்கின்றனர். இதை விட இந்தியா இலங்கை இராணுவத்தினால் சில நூறு பெண்கள் கற்பழிக்கப்பட்ட பின் கொன்றும், சீரழிய வைத்தும் வெறியாட்டம் ஆடப்பட்டுள்ளது ஆடப்படுகின்றது. இது போன்று தேசிய இயக்கங்களால் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கூட்டம் கூட்டமாகவும் புதைக்கப்பட்டனர். மணியந்தோட்டத்தில் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட நிகழ்வுக்கு பின்னணியில் புலிகள் இருந்துள்ளனர். இது போன்ற சில புதைகுழிகள் எம்மண்ணில் கண்டு பிடிக்கப்பட்டன. இதை விட இயக்கத்தின் உள்ளும் வெளியிலும் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியதுடன், இதை மூடி மறைக்க படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகளும் இலைமறை காயாக வெளிப்படத்தான் செய்தன, செய்கின்றன.

சில பத்தாயிரம் பெண்கள் கணவனை, மகனை, தந்தையை இழந்து இந்த ஆணாதிக்க அமைப்பில், அநாதைகளாகி வயிற்றுப் பிழைப்புக்கே கையேந்தி நிற்கின்றனர், நிற்கவைக்கப்படுகின்றனர். அதே போல் அன்றாட கஞ்சிக்கு இருந்த உழைப்பைக் கூட பறிகொடுத்த பெண்கள் ஊமையாக்கபட்டுள்ளனர், ஊமையாக்கப்படுகின்றனர். இலங்கையில் 20 லட்சம் பேர் (மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர்) ஊனமுற்றவர்களாக உள்ளதுடன், இதில் அண்ணளவாக 15 லட்சம் பேர் எழுந்து நடமாட முடியாத நிலையில், மூன்று சக்கர வண்டியை நம்பி பிச்சைக்காராக வாழ்கின்றனர். சில ஆயிரம் குழந்தைகள் தாய் தந்தையை இழந்து அனாதையாகி, இந்த சுரண்டல்

www.tamilarangam.net



அமைப்பில் அனைத்து விதமான ஒடுக்குமுறைக்குள்ளாகி பரிதாபத்துக்குரியவராகியுள்ளனர், பரிதாபத்துக்குரியவராகின்றனர். இந்த அநாதைக் குழந்தைகளின் அவலத்தை பராமரிக்கும் புலிகள், தமது குறுந்தேசிய இனவாத பாசீச சர்வாதிகாரத்தை நிறுவ, அவர்களை மூளைச் சலவை செய்து நேரடியாக ஆயுதபாணியாக்குகின்றனர். சொந்த மண்ணையும் நாட்டையும் விட்டு அகதியாக மேற்கு நாடுகளில் புகலிடம் புகுந்தவர்கள், பொருளாதார ரீதியாக பலமாக இருந்த போதும், அங்கு மூன்றாம் தர அடிமையாக நிறவாதத்தையும், கொடூரமான சுரண்டலையும் சந்திக்கின்றனர். பகட்டுத்தனமான யாழ் பூர்சுவா அடிப்படை வாதத்தை கொண்ட இந்த மேற்கு புலம்பெயர் பிரிவுகள், உலகமயமாதலின் பண்பாட்டு கலாச்சாரத்தை இலங்கையில் வெம்பவைத்து வீங்கி விரிவாக்கும் வகையில், தனது ஊதியத்தை வரைமுறையின்றி பயன்படுத்த துணையாகின்றனர். அதாவது கொழும்பையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்கின்ற மேற்கு புலம்பெயர் உறவினர்களும், யாழ் குடாவிலும் புலம் பெயர் பணத்தை கொண்டே ஏகாதிபத்திய பண்பாட்டு கலாச்சார சீரழிவுகளை சமூக மயமாக்கின்றனர். இந்த புலம்பெயர் பணத்தை அடிப்படையாக கொண்ட பண்பாட்டு சீரழிவை நம்பி, பெருமளவில் பொறுக்கி வாழும் பல ஆடம்பர வக்கிரமான தொழில்கள் விரிவடைகின்றன. இந்த புலம் பெயர் பணத்தை உழையாது அனுபவிக்கும் சுகவாழ்வு வாழும் பிரிவினரின் அற்ப உடல் சுகத்தை போக்கும் கருவியாக, பல ஆயிரம் பெண்கள் இனம் கடந்து பலியிடப்பட்டுள்ளனர். சமூக உறவுகள் பணத்தை அடிப்படையாக கொண்ட வர்த்தகமாக மாறிவிட்டது. மறுதளத்தில் சொந்த மண்ணை விட்டு நாட்டிலும், நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் வாழும் அகதிகளின் வாழ்வு என்பது மிகக் கொடூரமானதாகும். வாழ வழியற்றதுடன், உழைப்பை இழந்ததுடன், அனைத்தையும் இழந்துவிட்ட இவர்களின் வாழ்க்கை, பல தலைமுறையை கடந்து துயரம் தொடருமளவுக்கு, உலகமயமாதல் விரிவாக்க உலகில் அவலமாக காட்சியளிக்கின்றது. சொந்த மண் முதல் புலம் பெயர் நாடுகள் வரை மனநோயாளர்கள் எண்ணிக்கை என்பது, வரைமுறையின்றி பெருகிச் செல்லுகின்றது. இடங்களுக்கும், நிலமைகளுக்கும், சூழலுக்கும் ஏற்ப இது வேறுபட்ட போதும், மனித அவலம் பெருகிச் செல்வதில் எந்த தடையையும் சந்திக்கவில்லை.

புலம்பெயர் சமூகம் சீரற்ற வயது தொடர்ச்சியின்றிய, குறித்த வயதுடையோரே புலம் பெயர்ந்தனர். இதனால் இவர்களின் எதிர்காலம் ஆழமாக சீரழிவை சந்திக்கின்றது, சந்திக்கவுள்ளது. மேற்கின் தனிமனித சுதந்திர ஜனநாயகத்தில் வெம்பிப் போகும் சமுதாய உறவுகள், எதிர் காலத்தில் குழந்தைகள் பெற்றோரை தனிமையாக கைவிட்டுச் செல்வது, ஒரு பொது போக்காக இருக்கும். இதனால் தனிமை மற்றும் கடின உழைப்பால் சீரழிந்தும், வேலையிழந்தும், இருக்க வீடு இழந்தும் அவலமாக வீதிகளில் அநாதையாக மடிவது முதல் மனநோயாளிகள் பெருக்கெடுப்பதுமாக நிலமை மாறிச் செல்லுகின்றது. புலம் பெயர் சமூகத் தொடர்பு சார்ந்து, எம் மண்ணில் உழைப்பிழந்து வாழும் கூட்டம், படிப்படியாக புலம்பெயர் தொடர்பை இழந்து சீரழிவை மூலதனமாக்குவது, அதன் பொதுக் குணாம்சமாக மாறிவருகின்றது. இதற்குள் இதை பிழைப்பாக்கியும் இந்த மக்களின் சொந்த சமூக அவலத்தை திசை திருப்பவும், இன்று புலம்பெயர் நாடுகள் முதல் இலங்கை வரை நூற்றுக் கணக்கான மதக்குழுக்கள் புதிது புதிதாக உருவாகி வருவதுடன், பாரியளவில் மதமாற்றத்தை செய்து வருகின்றனர். மக்களின் அவலத்தை பிழைப்புக்காக பயன்படுத்தும் மதங்களும் நபர்களும், மக்கள் சிந்திப்பதை தடுக்கும் வகையில் சிந்தனையை மழுங்கடிக்கின்றனர். உலகமயமாதலை மூடிமறைக்கும் வகையில், இதற்கான நிதி உதவிகள் இந்த மதவாத அமைப்புகளுக்கு தாராளமாக சென்றடைகின்றன. இந்த கூட்டம் இலங்கை முதல் ஐரோப்பா வரை பிரசுரங்களையும், விமானம் ஏறி பிரச்சாரங்களையும் செய்து தம்மை விரிவாக்கி வருகின்றனர். இதன் மூலம் தமிழ் மக்களின் அவல வாழ்வை, தமது சொந்த சுகபோகமாக்கின்றனர்.

### தேசிய விரோத துரோகக் குழுக்களும், அவர்களின் பாசீசக் கோட்பாடுகளும்

புலிகளின் பாசீசமும் ஜனநாயக விரோத சமூகத்தை நிலைநாட்டுவதால், துரோகம் சார்ந்த சமூகப் பிரிவை இடைவிடாது உற்பத்தி செய்கின்றது. ஒப்பிட்டு அளவில் அரசுக்கும் புலிக்கும் இடையில் பாசீசத்தை கையாளும் அளவிலும், பண்பிலும் புலிகள் மிகவும் வக்கிரமாக உள்ளனர். ஆனால்

www.tamilarangam.net



பிரதான எதிரி அரசாக தொடர்ந்து நீடிப்பது, இங்கு உள்ள ஒரு முரண்நிலையாக உள்ளது. இதனால் புலிகளின் அழித்தொழிப்பு அரசியல், அரசுக்கு பின்னால் ஒரு பெரும் பிரிவு மக்களை அணிதிரட்டி வருகின்றது. இதனுடன் சேர்ந்து ஆயுதம் ஏந்திய மற்றும் ஏந்தாத நிறுவனமயப்படுத்தப்பட்ட துரோகக் குழுக்களும் கூட, ஒரு சமூகப் பிரிவாக வளர்ச்சி உறுகின்றது.

உலகில் மிகப் பெரியளவிலான அழித்தொழிப்பை போராடும் இயக்கமான புலிகள் செய்த போதும், இது எதிர்மறையில் தமக்கு எதிரானவர்களை உற்பத்தி செய்கின்றது. இந்த உண்மையை நாம் இலங்கையில் கற்றுக் கொள்ள முடியும். ஜனநாயக மறுப்பும், அதற்கெதிரான பாசீச தண்டனை முறையும் எதிரிக்கு பெருமளவில் ஆட்களை சேர்த்துக் கொடுக்கின்றது. ஆரம்பத்தில் இயக்கங்களாக இருந்த அனைத்தையும் ஈவிரக்கமின்றி அழித்த புலிகள், அதன் உறுப்பினர்களை உயிருடன் வீதிகளில் எரித்தும் அடித்தும் கொன்ற போது, அவர்கள் தவிர்க்க முடியாதபடி தப்பியோட வேண்டியிருந்தது. கையில் சிக்கிய எவரும் தொடர்ந்து உயிர் வாழமுடியாத அவலம் தமிழீழத்தின் பாசீச ஒழுக்கமாகியது. தப்பி ஒடியவர்களை அரசும் மற்றும் இந்திய அரசும் அரவணைத்துக் கொண்டது. தப்பி ஒடியவர்கள் தமது தற்காப்பைச் சார்ந்து அரசின் தயவில் தப்பிப் பிழைக்க முடிந்த நிகழ்வு, போராட்டத்துக்கு பாதகமான ஒரு தொடர்ச்சியான நிலைக்கு இட்டுச் சென்றது. இது படிப்படியாக வளர்ச்சியுற்று சித்தாந்த ரீதியாகவே ஏகாதிபத்திய சார்பும், தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் போக்கும் வளர்ச்சியுற்று காணப்படுகின்றது. புலிகளை சொந்தக் காலில் நின்று எதிர்க்க வக்கற்ற இந்தக் குழுக்கள், மக்களையும் புலிகளையும் ஒன்றாக்கி எதிர்க்க தொடங்கினர். மக்களின் நியாயமான தேச விடுதலைப் போராட்டத்தையும் எதிர்த்து, எதிரியுடன் கூடி களத்தில் நிற்கின்றனர். அதை நியாயப்படுத்தும் அரசியல் பலம் பெற்றுள்ள இன்றைய நிலைக்கு, புலிகளின் ஜனநாயக விரோத பாசீசம் துணையாக நிற்கின்றது. துரோகம் அரசியல் ரீதியாக ஜனநாயகத்தை முன்னிறுத்தி நியாயப்படுத்தப்படுகின்றது. இதற்கு அரசியல் ரீதியாக கருத்துரைக்கும் அளவுக்கு, புலிகளின் பாசீசம் வழிகாட்டுகின்றது. புலிகளின் ஜனநாயக விரோத அரசியல் மலடாகிப் போனதால், பலவீனமான புலிகள் துல்லியமாக தனிமைப்பட்ட படுகொலைகள் மூலம் தமது அரசியலை வழிநடத்தகின்றனர். அரசியல் ரீதியாக புலிகளின் பாசித்தை மட்டுமல்ல, துரோகக் குழுக்களின் அரசியல் மற்றும் அது முன்வைக்கும் ஜனநாயக சித்தாந்தையும் கூட நாம் எதிர்த்துப் போராட வேண்டிய கால கட்டத்தில் நாம் போராடவேண்டியுள்ளது. உலகளவில் ஏகாதிபத்தியங்கள் நடத்துகின்ற ஆக்கிரமிப்புகள் அனைத்திலும், இந்த ஜனநாயகம் என்ற கண்ணியை புதைக்கின்றனர். இதையே அரசியல் துரோகிகளும் தமிழ் மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்துக்கு எதிராக புதைக்கின்றனர். புலிப் பாசிட்டுகள் தாராளமாக துரோகிகளை (இங்கு துரோகிகள் என்ற பதம் அமைப்பு வடிவம் சார்ந்த அரசியல் செயல்பாட்டு தளத்தில் கூறப்படுகின்றது. உதிரிகளை குறித்தல்ல. உதிரிகள் புலிகளின் பாசிசத்தால் சந்தர்ப்ப சூழ்நிலைமைகளால் அதில் தங்கி வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.) நாள் தோறும் உற்பத்தி செய்து கையளிக்கின்றனர். உலகளாவிய ஆக்கிரமிப்புக்குரிய தளத்தை கூட்டாகவே இடைவிடாது உற்பத்தி செய்கின்றனர். ஒன்றில் இருந்து ஒன்றை பிரிக்க முடியாத வரலாற்றச் சூழலில் நாம் போராட வேண்டி உள்ளது. இந்த நிலையில் இரு தளத்தில் எமது போராட்டம் தெளிவானதும் துல்லியமானதாக மாறியுள்ளது.

### பாசீசம் குறித்து அடிப்படையான தரவுகள்

பலர் ஜனநாயக கோரிக்கை என்ற எல்லைக்கு கீழ் நின்று, புலிகளின் பாசீசப் போக்கின் பின் வாலாக மாறியது துரதிஸ்ட வசமானதே. சமூக இயக்கத்தின் போக்கு இப்படி நீடிப்பதும், சீரழிவதும் தொடருகின்றது. இந்த நிலையில் புலிப் பாசீசத்தை அதன் கோட்பாட்டு வேர்களில் இருந்து அம்பலப்படுத்துவதன் மூலம், அதன் அரசியல் பரிணாமத்தை அரசியல் ரீதியாக முன் வைப்பது அவசியமாகிவிடுகின்றது.

பாசீசம் குறித்து மேற்கு நாடுகளுக்கும் எமது நாடுகளுக்கும் இடையில், அதன் வளர்ச்சி வடிவத்தில் குறிப்பான வேறுபாடுகள் உண்டு. ஆட்சிக்கு வரத் துடிக்கின்ற பாசீசம், எங்கும் தேசியம் என்ற

www.tamilarangam.net



மையக் கோசத்தில் தான் தன்னை நிலை நிறுத்துகின்றது. இந்தப் பாசீச தேசியம், பல்வேறு சமூகக் கூறுகள் சார்ந்து தன்னை நிலை நாட்டுகின்றது. மதம், தூய்மைக் கூறு, சாதி, இனம், நிறம், மரபு என வௌவெறு வழிகளில், பாசீசம் தேசியத்தை கட்டமைக்கின்றது. இது குட்டிபூர்சுவா வர்க்கத்தின் நலன்களை பூர்த்தி செய்வதாக பாசங்கு செய்தபடி, தன்னை நேர்மையானவனாக தூய்மையானவனாக காட்டிய படி அரங்கு வருகின்றது. ஆனால் இந்தப் பிரிவு ஆட்சிக்கு ஏறுகின்ற போது, அந்த ஆட்சி குட்டிபூர்சுவா வர்க்க நலன்களை பிரதிபலிப்பதில்லை. இது அந்த நாட்டில் எந்த பொருளாதார கட்டமைப்பு காணப்படுகின்றதோ, அதற்கு இசைவான பொருளாதார ஆதிக்க பிரிவை பலப்படுத்தி மக்களை அடக்கி ஒடுக்குகின்றது. உண்மையில் பாசீசம் உழைக்கும் மக்களை தொடர்ந்தும் சுரண்டும் வழியை நவீனப்படுத்தும், ஒரு வர்க்க சர்வாதிகாரமே. இருக்கும் சுரண்டும் வர்க்க நலன்களை தக்கவைக்கவும், அதை பாதுகாக்கவும், இருக்கின்ற அமைப்பால் முடியாத அளவுக்கு வர்க்கப் போராட்டம் நடக்கின்ற ஒரு நிலையில், பாசீசம் அதிகாரத்துக்கு வந்து சுரண்டும் வர்க்கத்தைப் பாதுகாக்கின்றது. பாசீசம் எப்போதும் அதிகாரத்துக்கு மூலதனத்தின் துணையுடன் வருகின்றது.

அரசு என்பது எப்போதும் ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரமே. ஜனநாயகம் என்பது எங்கும் எப்போதும் ஒரு வர்க்கத்தின் ஜனநாயகமே. இது இருக்கின்ற அமைப்பில் சுரண்டும் வர்க்கத்தின் அரசாகவும், அதன் ஜனநாயமாகவும் உள்ளது. சுரண்டும் வர்க்கத்தின் அடிப்படை நலன்களை, அமைதியான முறையில் முன்னேற்ற முடியாத வர்க்கப் போராட்டங்கள் நடக்கும் நிலையில், வன்முறை மூலம் சுரண்டலை பாதுகாப்பதே பாசீசத்தின் மையமான சராம்சமாகும். ஆனால் பாசீசம் ஆட்சிக்கு வரும் போது, இடைப்பட்ட வர்க்கங்களை பெருமளவில் சார்ந்தும், அடிநிலை வர்க்கங்களின் மேலான ஆதிக்கம் சார்ந்தே சாத்தியமாகின்றது. பாசீசம் ஆட்சியை கைப்பற்ற முன்பாகவே, தன்னை முழுமையாக மூடிமறைத்த கலைவை கோட்பாடுகளுடன், இடைப்பட்ட வர்க்கங்கள் சார்ந்து தன்னை ஒரு இயக்கமாக, கட்சியாக காட்சியளிக்கின்றது.

இன்னொரு வகையான பாசீசம், இருக்கின்ற ஆட்சி அமைப்புக்குள் நிகழ்கின்றது. இங்கும் அவை முழுமையான பாசீசமாக தன்னை முதலில் இனம் காட்டுவதில்லை. உழைக்கும் மக்களை சுரண்டும் வடிவம் எந்தளவுக்கு அதிகமாக எதிர்ப்புக்கு உள்ளாகின்றதோ, அப்போது ஆட்சி அமைப்பில் பாசீசம் ஒரு கூறாக வளர்ச்சியடைகின்றது. இது பாசீசமாக முழுமை பெறுவது, பாட்டாளி வர்க்கம் ஆட்சியமைப்பை கைப்பறும் இருவழிப் போராட்டத்தில் தான். ஜனநாயக புரட்சி நடைபெறாத நாடுகளில் பாசீசம் என்பது, மேலும் கூர்மையாக பொதுவாக அரசியல் கட்சிகளின் அரசியல் வழியில் இணைந்தே காணப்படுகின்றது. இங்கு பூர்சுவா ஜனநாயகம் என்பது சமூகத்தின் ஒரு கூறாக இருப்பதில்லை. இங்கு பாசீசம் என்பது ஒரு பண்பியல் கூறாக, அதன் பொருளாதார சமூகக் கட்டமைப்பு மீது இணைந்தே காணப்படுகின்றது. இதனால் பாசீசம் என்பது அதன் சமூக பண்பாட்டு கலாச்சாரக் கூறில் இனங்காண முடியாத சமூகக் கூறாக உள்ளது. அது தன்னை கலவைக் கோட்பாடுகளால் மூடிமறைத்தபடி, இது உயிருள்ளதாக எப்போதும் உள்ளது. மக்களைச் சாராத அனைத்து சமூகக் கூறுகளும், பாசீசக் கூறை அடைப்படையாக கொள்கின்றது. இங்கு உருவாகும் அமைப்புகள், இயக்கங்கள் மக்களை விட்டு விலகி, பாசீசத்தை தனது வழியாக நடைமுறையாக கொள்கின்றது.

பாசீசத்தை புரிந்து கொண்டால் தான், நாம் சமூகத்தை தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். பாசீசத்தை தவறாக புரிந்து கொள்ளாமல் இருப்பது எப்போதும் மிக முக்கியமானது. முதலில் ஒவ்வொரு ஜனநாயகமும் ஒரு சர்வாதிகாரம் தான். இதை தெளிவாக நாம் புரிந்து கொண்டாக வேண்டும். அதாவது முதலாளித்துவ (பூர்சுவா) ஜனநாயகத்தையும், முதலாளித்துவ (பூர்சுவா) சர்வாதிகாரத்தையும் எதிரெதிராக காட்டுவது, புரிந்து கொள்வது தவறானது. அரசு என்பது எங்கும் எப்போதும் ஒரு வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சி தான். ஒரு அரசு பற்றி, அந்த அரசை தெரிவு செய்யும் ஜனநாயகம் பற்றி, அந்த அரசு பின்பற்றும் கொள்கை பற்றிய மயக்கம் இருக்காத வரை தான், பாசீசத்தை செம்மையாக துல்லியமாக புரிந்து கொள்ளமுடியும். மக்கள் மேல் நிறுவும் ஆட்சி

www.tamilarangam.net



எந்த வடிவில் இருந்தாலும், அது ஒரு வர்க்கத்தின் ஆட்சி தான். அது ஒரு வர்க்க சர்வாதிகாரம் தான். பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்தாலும், அந்த அரசுக்கும் இது பொருந்தும். இங்கு பாட்டாளி வர்க்க அரசுக்கும் மற்றைய ஆட்சிக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு, எந்த வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பது தான். இதில் துல்லியமான அடிப்படையான வேறுபாடு உண்டு. எந்த வர்க்கத்தைப் பலப்படுத்தி, எந்த வர்க்கத்தை ஒடுக்குவது என்பது பாட்டாளி வர்க்கமல்லாத அரசுகளின் அடிப்படையாகும். மாறாக பாட்டாளி வர்க்கம் தன்னை பலப்படுத்தியபடி, வர்க்கத்தை ஒழிப்பதை அடிப்படையாக கொள்கின்றது. அதாவது அனைத்து மக்களையும் உழைக்கும் மக்களாக்குவதன் மூலம், சுரண்டுவதை ஒழித்து வர்க்கங்களை இல்லாது ஒழிக்கின்றது. சுரண்டும் வர்க்க அரசு என்பது வர்க்கங்களின் நலன்களுக்காக உழைப்பது அல்லது அதைப் பாதுகாப்பது என்பதை அடிப்படையாக கொண்டது. அரசு என்பது சர்வாதிகாரத்தை அடிப்படையாகவும் ஆதாரமாக கொள்கின்றது.

பாசிசம் வர்க்கத்துக்கு அப்பாலான ஒன்று அல்ல. சுரண்டும் வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை மேலும் ஆழமாக்குவதே பாசிசம். அதாவது பல்வேறு வர்க்கங்களுக்கு இடையில் நடக்கும் போராட்டத்தில், தொடர்ந்தும் சுரண்டலை தொடர்ந்து நடத்த முடியாத ஒரு நிலையில், பாசிச சர்வாதிகாரம் ஆட்சியில் அமர்த்தப்படுகின்றது. ஆனால் பாசிசம் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு விதமாக தன்னை ஒழுங்கமைக்கின்றது, ஆட்சிக்கு வருகின்றது. ஆனால் அதன் பண்பியல் சமூக கூறுகள் தொடங்கி, அதன் நோக்கம் ஒரே விதமாக வெளிப்படுகின்றது.

பாசிசத்தின் உருவாக்கதிற்கு எப்போதும் சுரண்டல் கட்டமைப்பு சார்ந்த, ஜனநாயக விரோதப் போக்கே அடிப்படையாகவும் ஆதாரமாகவும் உள்ளது. இதுவே பாசிசத்தின் மையமான மூல ஊற்றாக உள்ளது. ஆனால் பாசிசம் எப்போதும் உழைப்பவன் சுரண்டப்படுவதை மூடிமறைக்கின்றது. மாறாக வர்க்க கூட்டடைப் பற்றியும், ஆட்சிக்கு வந்தால் வர்க்க முரண்பாட்டை ஒழிக்கப்போவதாக மாயை ஏற்படுத்துகின்றது. மக்களை மயக்க நிலையில் தள்ளி, மந்தை நிலைக்கு தாழ்த்துகின்றது. தமது சொந்த பாசிசக் கோட்பாட்டை மக்கள் புரிந்து கொள்ள முடியாத இருட்டில் நிலை நிறுத்துகின்றது. கதம்பக் கூட்டுடன் கூடிய வெறித்தனமான தேசியவாத தத்துவம் இணைந்தே, பாசிசத்தை உருவாக்கின்றது. தேசியவாத வெறியை மற்றைய மக்கள் இனங்கள் மேல் கட்டமைக்கின்றது. மற்றயை இன மற்றும் இனவாத கட்சிகளின் கோட்பாடுகளின் மேல் அல்ல. ஆளும் வர்க்க கோட்பாடுகள் மேல் அல்ல. மக்களுக்கு எதிரான சுரண்டலை அடிப்படையாக கொண்டு, சுரண்டும் ஜனநாயக விரோத போக்குகளை எதிர்த்து, பாசிசம் தன்னை கட்டமைப்பதில்லை. மாறாக அதை மூடிமறைத்தபடி, அதை மேலும் ஆழமாக செய்வதை அடிப்படையாக கொண்டே மக்கள் கூட்டத்தை எப்போதும் எதிரியாக காண்கின்றது. ஆரம்பம் முதலே உழைக்கும் மக்களின் நலன்களை பிரதிபலிக்கும் சித்தாந்தங்களையும், அது சார்ந்த அமைப்புகளையும் வேட்டையாடுகின்றது. மக்கள் சுயமாக சிந்திக்க முடியாத நிலையை தகவமைத்து, அந்த நிலத்தில் தான் பாசிசம் செழித்து வளரத் தொடங்குகின்றது.

பாசிச இயக்கம் எப்போதும் யுத்தத்தின் போதே இலகுவாக தன்னை தகவமைக்கின்றது. சமூகங்களுக்கிடையான மக்கள் விரோத முரண்பாட்டை முன் தள்ளுவதன் மூலம், பாசிசம் தன்னைத் தான் அரங்கில் முன்நிறுத்துகின்றது. இந்த பாசிச முரண்பாட்டை யுத்த நிலைக்கு நகர்த்தும் போது, பாசிச சட்டங்கள், ஒழுக்கங்கள் இலகுவாக சமூக அங்கீகாரத்துக்கு உள்ளாகிவிடுகின்றது. முரண்பட்ட சமூகப் பிரிவுகளை ஒடுக்க உருவாகும் சட்டங்கள், படிப்படியாக இயல்பில் சொந்த மக்கள் கூட்டத்தின் கழுத்தில் கைவைத்து குரல்வளையை நெரித்தே கொன்றுவிடும் அளவுக்கு தன்னை பலப்படுத்தி விடுகின்றது. இந்த நிலைமை கனிந்து வர, தற்செயலான குறிப்பான செயல் தந்திரங்களில் முற்றாகச் சார்ந்து நிற்கின்றது. இங்கு முன் கூட்டியே திட்டமிட்ட ஒழுங்கமைப்பில் பாசிச கட்டமைப்புகள் சாத்தியமாவதில்லை. ஏனெனில் பாசிசம் மக்கள் விரோதத் தன்மை கொண்டமையால், தன்னை மூடிமறைத்தே அரங்கில் நுழைகின்றதே ஒழிய, முன் கூட்டியே ஒழுங்கமைந்த வடிவில் தன்னைத்தான்

www.tamilarangam.net



நிர்வாணப்படுத்திவிடுவதில்லை. பாசிசம் உருவாக்கம் குறிப்பாக ஸ்தாபன ரீதியான கட்டமைப்பை மட்டும் எப்போதும் அடிப்படையாக கொள்வதில்லை. மாறாக பொருளாதார நிலமை, உள்நாட்டு முரண்பாடுகள், அக புற நிலமைகள், தொழிலாளர் வர்க்கத்தின் வீச்சு என பல அம்சத்துடன் தான் பாசிசம் தன்னை தகவமைக்கின்றது. மக்கள் போராடும் தன்மையைப் பொறுத்து, பாசிச சர்வாதிகாரம் நிலைமைக்கு ஏற்ப வடிவங்களை மாற்றுகின்றது. தன்னை மூடிமறைக்கின்றது. கதம்பமாக தன்னை அலங்கரித்துக் கொள்கின்றது. தீவிரமான சமூகப் பிளவுகளை முன் தள்ளுகின்றது. அதில் தன்னை தூய்மையானவனாக, நேர்மையானவனாக காட்டிக் கொள்கின்றது. நடைமுறையில் உள்ள சமூகப் பண்பாட்டு கலாச்சாரத்தின் பிற்போக்கு கூறுகளை நுட்பமாகத் தெரிந்தெடுத்து அதை உயர்த்துகின்றது. அதை பாதுகாக்கப் போவதாக சபதம் ஏற்கின்றது.

பாசிசம் எப்போதும் மக்களின் அடிப்படையான அன்றாட பிரச்சனை மீது அக்கறையுள்ளதாக நடிக்க முடிகின்றது.

இதன் மூலம் மக்களை திரட்டமுடிகின்றது. மக்களின் நல் உணர்வுகளையும், தியாக உணர்வுகளையும் கூட பாசிசம் தனது சொந்த வக்கிரத்துக்கு பயன்படுத்துகின்றது. ஆனால் எதார்த்தத்தில் பாசிசம் அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொரு இடத்திலும், மக்களின் அடிப்படையான தேவைகளையும் கோரிக்கைகளையும் அழிப்பதில் தீவிரமான செயல் தளத்தைக் கட்டமைக்கின்றது. மக்களை கவர்ச்சி காட்டி, அதில் அவர்களை வாழ வைத்து, அதில் இருந்து மீள முடியாத வகையில் செரித்து விடுவது பாசிசத்தின் அடிப்படையான பண்பாகும். அரசை கைப்பற்ற தீவிரமான உணர்ச்சிகரமான கோசங்களால் தன்னை அலங்கரிக்கும் அதே உள்ளடகத்தில், அதை வென்று எடுக்க மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிப்பது அவசியம் என்பதை ஒரு பாசிச பண்பாடாகவே சமூகத்திடையே எடுத்துச் செல்லுகின்றனர். ஜனநாயகத்தின் அனைத்துவிதமான பண்புக் கூறுகளையும் பாசிசம் அழிக்கும் போது, மக்கள் நீதியின் பாலான நம்பிக்கையை முற்றாக இழந்துவிடுகின்றனர். சமூகத்தின் நீதி என்று எதுவும் இருப்பதில்லை. எல்லாவிதமான வழிகளிலும் எப்படியும் வாழ முடியும் என்ற நிலைப்பாடு, ஒரு பணக்காரக் கும்பலை அதிரடியாக உற்பத்தி செய்கின்றது. எப்படியும் வாழ முடியும் என்ற நிலையில், பாசிச கட்டமைப்புக்கு பணத்தை தாரை வார்ப்பதன் மூலம், திடீர் பணக்கார கும்பல் ஒன்று உருவாகின்றது. நீதியான வாழ்வு மறுக்கப்படுகின்றது. மக்கள் நீதியின் பாலான நம்பிக்கைகளை இழந்து, எதையும் நியாயப்படுத்தும் நிலைக்கு சமூகத்தை இட்டுச் செல்லுகின்றது.

மக்கள் தாம் எப்படி வாழ்ந்தோம் என்பதை அறியாத இருட்டில் தள்ளிவிடுவதும், தாம் எப்படி இனி வாழப் போகின்றோம் என்பதை தெரியாத சூனியத்திலும் பாசிசம் செழித்தோங்குகின்றது. இது ஒட்டு மொத்தமாகவே ஜனநாயகத்தின் குரல்வளையை வெட்டிச் சாய்க்கின்றது. இதன் முதல் படியாக பாசிசம் ஆட்சியை கைப்பற்ற அரசை எதிர்க்கும் அதே நேரம், மற்றைய கட்சிகளையும் ஈவிரக்கமற்ற சமரசமற்ற அழித்தொழிப்பை நடத்துவதன் மூலம் தன்னை தூய்மையானதாக நிலை நாட்டமுனைகின்றது. அழித்தொழிப்பு சமூக இருப்பின் அடிப்படையான சமூகக் கோட்பாடாக பாசிசம் முன்தள்ளுகின்றது. எங்கும் எதிலும் அழித்தொழிப்பு மையக் கோசமாக, பாசிச அமைப்பின் நீடிப்பிற்கான உயிராகவும் மாறிவிடுகின்றது. இந்த அழித்தொழிப்பு இல்லாத எந்த நிலையிலும், பாசிச இயக்கத்தின் இருப்பு நீடிக்க முடியாது என்ற நிலை படிப்படியாக உருவாகிவிடுகின்றது. இது தன்னை மூடிமறைக்க கட்டுப்பாடற்ற இனவெறி பிடித்த, ஆதிக்க வெறி பிடித்த யுத்தத்தை முன் தள்ளுகின்றது. எதிரியை ஏன் நாம் எதிர்கின்றோம் என்ற அடிப்படையான அரசியல் காரணத்தை குழிதோண்டி புதைத்து விட்டு, இனவெறி பிடித்த ஆதிக்க வெறி பிடித்த யுத்தத்தை ஆணையில் வைக்கின்றனர். மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை மறுத்து நிற்கும் பாசிசம், மாறாக மற்றைய மக்கள் கூட்டம் மீதான ஆதிக்க வெறியை அரசியலாக்கிவிடுகின்றனர். இதன் மூலம் தன்னைப் பலப்படுத்தவும் நீடிக்கவும் கடிவாளம் இடுகின்றனர்.

www.tamilarangam.net



தனது பாசீச கட்டமைப்பை நீடிக்கவும், நிலைக்கவும் சலுகைகளை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொள்கின்றது. ஒரு லும்பன் கூட்டத்தை உருவாக்கி, சமூக இயக்கத்தை கண்காணிக்கும் வடிவில் கட்டமைக்கின்றது. பாசீசம் தன்னைச் சுற்றி தனது கட்டமைப்பில் தன்னுடன் இணைந்து நிற்பவனுக்கே சலுகைகளை வாரி வழங்குகின்றது. இதைச் சுற்றி பெரும்பாலான மக்கள் தம்மையும், தமது தேவையையும் பூர்த்தி செய்வது நிகழ்கின்றது. எதைச் செய்தாலும் பாசீசத்தை நியாப்படுத்துவது ஒரு நிபந்தனையாக மாறிவிடுகின்றது. இது அடிப்படையில் நியாயப்படுத்துவதை கடமையாகவும், அடிப்படையான தேசியக் கொள்கையாகவும் மாற்றி விடுகின்றது. மக்களின் மந்தைத்தனத்தை இதற்கு சாதகமாக்கிவிடுகின்றது. தன்னைச் சுற்றி பொறுக்கி வாழும் லும்பன் கும்பலை அடிப்படையாக கொண்டு, பாசீசத்தைக் கட்டமைப்பதுடன், மக்களை கண்காணிக்கும் அமைப்பாக மாற்றுகின்றது.

அத்துடன் பாசீசம் தனது கட்டுப்பாட்டு பிரதேசம் தொடங்கி மற்றைய பிரதேசங்கள் எங்கும் தகவல் தொழில் நுட்பத்தினை (மீடியாக்களை), தனது பாசீச பிரச்சார வடிவமாக்கிவிடுகின்றது. பத்திரிகைகள் பாசீசத்தின் தூண்களாகி விடுகின்றது. பத்திரிகை அமைப்பு பாசீசத்தை நியாயப்படுத்தும் பினாமியத்தை, தனது சுதந்திரமான வெளிப்பாடாக பீற்றுவது பாசீச பண்பாகி விடுகின்றது. முற்றாக மாற்று கருத்து தளத்தை இல்லாததாக்குகின்றது. மக்களை முரண்பாட்டின் அடிப்படையில் சிந்திக்க துண்டும் மாற்றுக் கருத்துகள் முற்றாக இல்லாது ஒழிக்கின்றது. பாசீசத்தை நியாயப்படுத்தும் ஒரேயொரு செய்திகளும், சமூக கண்ணோட்டமும் திட்டமிட்டே பரப்பப்படுகின்றது. இதற்கு அப்பால் உள்ளவைகளை முற்றாக பாசீசம் அழிக்கின்றது. எங்கும் எதிலும் பாசீசம் குடிகொள்கின்றது. இந்த கட்டமைப்பு பொறுக்கி வாழும் லும்பன் கும்பல் ஒன்றால் சீராகவும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்படுகின்றது. இது இயன்ற எல்லை வரை பொறுக்கி வாழும், தனது சமூக அடிப்படைக்கு தேவையான நிதியை மக்களிடம் இருந்து பகற் கொள்ளை அடிக்கின்றது. சமூகத்தை சுரண்டும் மூலதனத்துக்கு வாலாட்டி நக்கும் இந்த பாசீசக் கும்பல், மக்களை நிறுவன ரீதியாகவே சுரண்டுவதில் தன்னை ஒழுங்கமைக்கின்றது. எங்கும் எதிலும் சுரண்டலை அடிப்படையான கட்டமைப்பாக மாற்றிவிடுகின்றது. செல்வத்தை திரட்டும் போக்கு அதிகரிக்கும் போது, பாசீசம் அதன் வளர்ச்சி படியில் எகிறிச் செல்லுகின்றது. பணத்தின் திரட்டல் உயர்ச்சியடைகின்ற போது, அதை சார்ந்து பொறுக்கி வாழும் ஒரு கும்பலும் வளர்ச்சி உறுகின்றது. இது பாசீச சித்தாந்தத்தால் தன்னை ஒழுங்கமைத்து ஒரு சமூக நிறுவனமாகின்றது.

பாசீசம் மக்கள் மேல் ஒரு பயங்கரவாதத்தை கட்டமைத்து தொடரான அச்சுறுத்தல் மேல் தன்னை நிலைநிறுத்தி நீடிக்கின்றது. எங்கும் எதிலும் [illegible] அடிப்படையான சமூக ஒழுங்கை முன்வைக்கின்றது. பயங்கரவாதம் என்பது சமூக உட்கூறில் உயிருள்ள ஒரு பிண்டமாகவே தொடருகின்றது. இது வரைமுறையற்ற அச்சுறுத்தலை நிலைநிறுத்துகின்றது. இந்த பயங்கரவாதத்தின் நீடித்த நிலைத்த தன்மையை, செயல் உள்ள இயக்கமாக மாற்ற, தனக்கேயுரிய லும்பன் கும்பலை சமூகத்தில் இருந்து எப்போதும் சரியாக இனம் கண்டு கொண்டு அணிதிரட்டுகின்றது. பாசீசம் தன்னையும் தனது கட்டமைப்பையும் பாதுகாக்க, சமூக உழைப்புடன் ஈடுபடாத இளம் வயதினரை அதிகம் சாந்து நிற்கின்றது. மாற்றுக் கருத்து எதையும் தெரிந்து கொள்ளாத மந்தைச் சமூகத்தை இதற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொள்கின்றது. இளம் வயது சிறுவர் சிறுமிகளின் அடித்தளத்தில் பாசீசம் உறுதியாக தன் கால்களை ஊன்றுகின்றது. உழைப்பு பற்றி தெரிந்தேயிராத இந்த சிறுவர்கள் சிறுமிகள், உழைப்பவனின் உழைப்பை சூறையாடுவதில் தலை சிறந்த கொள்ளைக்காரராக மாறிவிடுகின்றனர். உழைப்பவனை இழிவாக கருதும் சமூக அடிப்படையை சுவீகரிக்கும் இந்த லும்பன்கள், உழைப்பவனை எப்படியும் நடத்தும் பண்பாடு உயிருள்ளதாகவிடுகின்றது. பாசீசக் கட்டமைப்பில் சமூக இழிவே உழைப்பவனை அலங்கரிக்கின்றது. உழைப்பனை சமூகத்தின் ஒரு அங்கமாகக் கூட பாசீசம் கருத மறுக்கின்றது. சமூக உறவுகளைக் கூட பாசீசம் உழைப்பவனிடம் இருந்து எட்டி உதைக்கின்றது. உழைப்பவனிடம் பொறுக்கி வாழ்வதும், சூறையாடி வாழ்வதும் இந்த சிறுவர்களுக்கு களிப்பூட்டக் கூடிய ஒரு

www.tamilarangam.net



வக்கிரமான கவர்ச்சிகரமான பொழுதுபோக்காக மாறிவிடுகின்றது. அதிக செல்வத்தை திரட்டிக் கொடுப்பதன் மூலம், நம்பகத் தன்மையை பாசீசம் அவர்களுக்கு பரிசளிக்கின்றது. மக்களை பாசீச ஒழுங்கமைப்பில் நீடிக்க வைக்கவும், அதற்குள் சிந்திக்க வைக்கவும், செயற்கையான சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்குகின்றனர். பாசீசம் சமுதாயத்தில் வறுமையை செயற்கையாக உருவாக்கிவிடுகின்றது. உணவுக்கு வழியற்று கையேந்தும் நிலையை உருவாக்கி, ஏழைக் குழந்தைகளை உள் வாங்குகின்றது. தாய் தந்தைகளை எதிரியிடமும், சொந்த பாசீச கட்டமைப்பிலும் கொன்று விட்ட நிலையில், அநாதைகளாகும் அப்பாவிக் குழந்தைகளை பாசீசம் அபகரிக்கின்றது. இந்த குழந்தைகளை பாசீசத்தின் நிலையான தூண்களாக மாற்றி விடுகின்றனர். பாசீசக் கட்டமைப்பின் ஆரம்ப வடிவங்கள், எப்போதும் அராஜகத்தை ஆதாரமாக அடிப்படையாகவும் கொள்கின்றது. எந்த சட்ட ஒழுங்கையும் அது தனக்கு தானே மறுக்கின்றது. மக்கள் மேல் கடுமையான அராஜக ஒடுக்குமுறையை வரைமுறையின்றி கையாளுகின்றது. தனது பாசீச சட்டத்தில் இருந்து சொந்த அணிகளுக்கு விதிவிலக்கு அளிக்கின்றது. இந்த அராஜக லும்பன் கும்பலின் சித்தாந்த செயல்பாடுகள் ஆரம்பத்தில், இருக்கும் எந்த சமூக அமைப்புக்கும் உட்பட்டவை அல்ல. சலுகையுடன் கூடிய பாசீச அமைப்பு, மக்களுக்கு எதிராக எதையும் எப்படியும் கையாளும் சுதந்திரத்தை அடிப்படையாக கொண்டது. மக்களை நாயிலும் கீழானவர்களாக இழிவுபடுத்துகின்றனர்.

இந்த லும்பன் பாசீசக் கும்பல் தமக்கு இடையில் உட்கட்சி ஜனநாயகத்தை முற்றாக மறுதலிக்கின்றது. இங்கு அதிகாரத்தின் வடிவம் சார்ந்து, இராணுவ ஒழுங்கமைப்பை அரசியல் வடிவமாக்குகின்றது. ஆயுதத்தை அரசியலில் ஆணையாக்கி அதை வடிவமைக்கின்றது. இயக்கத்தின் கட்டமைப்பு இராணுவ வாதம் சார்ந்த ஒன்றாக நீடிக்கின்றது. இங்கு துப்பாக்கி குண்டுகளை ஆணையில் வைக்கின்றது. எந்த சட்ட ஒழுங்குக்கும் உட்படாத இயக்க உறுப்பினர்கள், தலைமைக்கு எதிராக செயல்படுவது மட்டுமே தண்டனைக்குரிய குற்றமாக உள்ளது. மற்றைய எல்லா நிலையிலும் எதையும் எப்படியும் செய்து கொள்ள அனுமதிக்கின்றது. சொந்த அணி உள்ளிட்ட வெளியில் தமது பாசீச கட்டமைப்பை நியாயப்படுத்தக் கூடிய அணியை விலைக்கு வாங்குகின்றது. இதற்கு அடிப்படையாக போலியான பாராட்டு நிகழ்ச்சிகளை பாசீசம் கட்டமைக்கின்றது. எங்கும் எப்போதும் பொய்யும் புரட்டும், கவர்ச்சியும், போலிப் பாராட்டுகளும் பாசீசத்தின் ஒழுங்கு அமைப்புக்கும், அதன் நீடிப்புக்கும் ஆதாரமான அடிப்படையான நிகழ்ச்சி நிரலாக உள்ளது.

சமூகத்தை கட்டுப்படுத்தவும், அடக்கி ஆளவும் தனது அதிகாரத்தை உயர்ந்த பட்சமாக ஆணையில் வைக்கின்றது. பாசீசம் அதிகாரத்தை தலைக்கு மேல் உயரமாகவே குவித்துவிடுகின்றது. இதன் மூலம் தனது வர்க்க தன்மையை கதம்பக் கோட்பாட்டில் இருந்து, தெளிவாக பெரும் மூலதனத்தின் நலன்களை வெளிப்படுத்த தொடங்குகின்றது. இதன் மூலம் ஒட்டு மொத்தமாக தன்னை ஒரு சீரான கோட்பாட்டு ரீதியான நடைமுறை சார்ந்த அமைப்பாக காட்ட முனைகின்றது. இது குட்டிபூர்சுவா வர்க்க நலனை பூர்த்தி செய்யும் தகுதி தனக்கு உண்டு என்று நிறுவ முனைகின்றது. ஆனால் இது கானல் நீராகவே எப்போதும் உள்ளதை அப்படியே நடைமுறை அனுபவம் இலகுவாக அம்பலப்படுத்தி விடுகின்றது. இதன் மூலம் அனைத்து மக்களையும் அனுசரித்து செல்லும் போக்கு சார்ந்த எந்தக் கோட்பாடும் பாசீசத்திடம் இருப்பதில்லை என்பது அம்பலமாகத் தொடங்கிவிடுகின்றது.

தன்னை மூடிமறைத்துக் கொள்ள, பாசீசம் சுரண்டும் வர்க்க பிரதிநிதிகளுக்கிடையில் பகைமையை களைந்து ஒரே குடையின் கொண்டு வர முயலும் போதும், உண்மையில் ஆழமான பகைமையே அதிகரிக்கின்றது. இது இடைவிடாது முரண்பாட்டை உற்பத்தி செய்கின்றது. இது இடைவிடாத ஆயுதம் ஏந்திய தனிக் குழுக்களை உருவாக்கின்றது. லும்பன் வாழ்வின் கட்டுப்பாடற்ற சமூகப் போக்கு, தவிர்க்க முடியாமல் லும்பன் கண்ணோட்டம் சார்ந்த குழுக்களை, சமூக முரண்பாடுகள் சார்ந்து தொடர்ச்சியாக உற்பத்தி செய்கின்றது. இது ஆயுதம் ஏந்திய எல்லை வரை விரிகின்றது.

www.tamilarangam.net



இது எதிரிக்கு நல்ல வாய்பை வழங்குகின்றது. வர்க்க அமைப்பாக சமூகச் சுரண்டல் உள்ளதால், எத்தனை கட்சிகளையும் குழுக்களையும் அழித்தாலும் அவை புத்துயிர் பெறுகின்றது. வர்க்க முரண்பாடுகள் தவிர்க்க முடியாது மாற்றுக் கருத்துக்கான இயங்கியல் போக்காகின்றது. மக்கள் விரோத முரண்பாடுகளும், யுத்தமும் இன்றி பாசிசம் நீடிக்க முடியாத ஒரு நிலையை அடையும் போது, இவற்றை திட்டமிட்டு உருவாக்குவதற்கு தொடர்ச்சியாக முனைப்புக் கொள்கின்றது. பாசிசம் யுத்தத்தை அடிப்படையாகவும், அடித்தளமாகவும் கொண்டு செயல்படுவதால், தேசிய பொருளாதாரத்தை அழித்து முற்றாக நாசமாக்குகின்றது. இது இன்றைய உலகநிலையில், மீள முடியாத அடிமைத்தனத்தை சமூகக் கூறாக்கிவிடுகின்றது. தேசங் கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் ஊடுருவலை, பாசிசம் தனக்கு சாதகமாக வளைத்துப் போடுகின்றது. அவர்களின் கைக்கூலிகளாக தம்மை தகவமைத்து அதுவாகி விடுகின்றனர். ஏகாதிபத்தியம் ஆழமாக சமூகத்தில் ஊடுருவவும், தேசியப் பண்புகளை உட்செரித்து அழிக்கவும் பாசிசம் இயன்றவரை தன்னை தனது நடவடிக்கைளால் தகவமைக்கின்றது.

பாசிச கட்டமைப்பில் இருந்து மக்கள் மீட்டு எடுப்பது என்பது மிகவும் கடினமானதும், நுட்பமானதுமாகும். பாசிசம் பற்றிய தவறான மதிப்பீடு குட்டிபூர்சுவா வர்க்கத்தின் மத்தியில் ஊசலாட்டத்தையும், சோர்வையும் சீதனமாக்குகின்றது. செயலற்ற தன்மைக்கு அடிக்கால் போடுகின்றது. பாசிசம் பற்றிய தவறான மதிப்பீடுகள் எப்போதும், பாசிசத்துடன் சமரசம் செய்யும் அடிப்படைக் கண்ணோட்டத்தில் இருந்து பிறக்கின்றது. இது பரஸ்பரம் தகவமைவதால், பாசிசம் அல்லாத சக்திகளின் சோரம் போதல் வீச்சாக தொடரும். தளத்தில் ஒரு எதிரி இருக்கும் பட்சத்தில், அவனுடன் சேர்ந்து நிற்பதன் மூலமும் சீரழிவு சமாந்தரமாக கட்டமைக்கப்படுகின்றது. பாசிசத்தை வெல்ல முடியாத ஒன்றாகவும் கூட குட்டிபூர்சுவா மனபாங்கு கட்டமைக்கின்றது. பாசிசத்தின் பயங்கரவாதத்தால் பீதியுற்ற பிரமைகள், எங்கும் எதிலும் புகுந்துவிடுகின்றது. சமூக இயக்கமே பீதியில் உறைந்து போகின்றது. பாசிசம் தனது அதிகாரத்தை நிலைநாட்ட உருவாக்கும் அடிப்படையான அரசியல் நிலைப்பாடு எப்போதும், சமூகம் செயலற்ற பீதியில் தத்தளிப்பதை உறுதி செய்கின்றது. இதை வெற்றிகரமாக உருவாக்கிவிடும் போது, பாசிசம் வெற்றி பெற்றுவிடுகின்றது. பாசிசம் பற்றி தவறான சித்தரிப்பு விதைக்கப்பட்ட நிலையில், செயலற்ற தன்மைக்கு அடிகால் இடப்படுகின்றது. பாசிசத்துக்கு எதிரான அரசியல் உணர்வுள்ள கட்டமைப்பின் அவசியம் நிராகரிப்பதில் இருந்தே, பொதுவான மாற்றுச் சிந்தனைத் தளம் தன்னை தகவமைக்கின்றது. இதன் மூலம் பாசிசத்துடன் அக்கம்பக்கமாக கூடி வாழ்ந்து விட முடியும் என்ற நம்புகின்றது.

பாசிசத்தை எதிர் கொண்டு போராடுவதற்கு எதிர்நீச்சல் அவசியமானது, நிபந்தனையானது. பாசிசத்தின் பொதுச் சூழலில் அவற்றை எதிர்கொள்ள, பாசிசத்துக்கும் மக்களுக்கும் இடையிலான அடிப்படை சமூகத் தேவைகளை இனம் பிரித்து அதை அகலப்படுத்த வேண்டும். பாசிசத்தின் மக்கள் விரோத முரண்பாடுகளை அகலமாக்க வேண்டும். பாசிச அழித்தொழிப்பு சமூக நடைமுறையாகவே உள்ள நிலையில், பாசிசத்தின் பிரதான முரண்பாடாக காட்டும் அடிப்படை முரண்பாட்டில் மக்கள் நலன்களை உயர்த்தி அதை பாசிசத்துக்கு எதிராக மாற்றவேண்டும். அதாவது மக்களுக்கு ஒரு எதிரி இருக்கும் பட்சத்தில், அந்த எதிரி பாசிசத்தின் எதிரியாகவும் இருக்கும் பட்சத்தில், மக்களின் அடிப்படை நலனில் இருந்த பாசிசத்தின் நலனை பிரித்து முரண்பாட்டை சமூக மயமாக்க வேண்டும். பாசிசத்தின் நலனும், பாசிசத்துக்கு உட்பட்டுள்ள மக்களின் நலனும் எப்போதும் எங்கும் ஒன்றாக இருப்பதில்லை.

பாசிசம் இருக்கின்ற சமூகக் கட்டமைப்பை தனக்கு இசைவாக தகவமைக்கின்றது. ஜனநாயகக் கோரிக்கை எதையும் இதற்குள் புகுத்த மறுக்கின்றது. இதை நாம் எப்போதும் தெளிவாக புரிந்து கொள்வது அவசியமானதாகும். இதில் இருந்தே பாசிசத்தை வேர் அறுக்கும் கண்ணியை நடவேண்டும். பாசிசத்துக்கு எதிரான எதிர்ப்பை, அரசியல் உணர்வுடன் செய்ய வைப்பது அனைத்தையும் விட முக்கியமானதும், முதன்மையானதுமாகும். இங்கு உணர்வு என்பது எப்போதும் தெளிவாக அரசியல் சார்ந்தாக இருக்க வேண்டும். எப்போதும் அரசியல் உணர்வற்ற செயல்பாடுகள்,

www.tamilarangam.net



பாசீசத்தை செழுமையாக வளர்ப்பதாகவே மாறும். பாசீசத்துக்கு எதிராக தன்னிச்சையான மக்கள் போராட்டம் நடக்கும் போது, பாசீசத்தை சார்ந்து நிற்கும் சக்திகள் தடுமாறுவதையும், பாசீச கொள்கை மேலான சந்தேகம் அதிகமாக எப்போதும் கேள்விக்குள்ளாகின்றது. இதை எப்போதும் சாதகமாக கொண்டு, அகலப்படுத்த வேண்டும். பாசீசம் அதிகாரத்துக்கு வந்த பின்பு அழித்தொழிப்பு ஒரு பாசீச சமூக நடைமுறையாக உள்ள ஒரு நிலையில், அவர்களின் செயல்பாடுகளுடன் நேரடியாக முட்டி மோதுவதன் மூலம் தனிமைப்படுதல், இனம் காணப்படுத்தல் அதிகரிக்கும். மாறாக மக்களின் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புடையதும் பாசீசத்துடனான முரண்பாட்டையும் மிக தெளிவாக அடையாளம் கண்டு, அதை அகலப்படுத்துவதன் மூலம் பாசீசக் கட்டமைப்பில் விரிச்சலை உருவாக்க முடியும்.

பாசீச கட்டமைப்பில் முரண்பாடு கொண்ட மக்கள் கூட்டம், புரட்சிகரமான மாற்று அடிப்படை இன்றி தம்மை ஒரு நாளும் தாமாக வெளிப்படுத்த மாட்டார்கள். பாசீசத்துடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளதாக நடிப்பர். இதை நாம் தெளிவாக புரிந்து கொண்டு, அரசியல் ரீதியாக இதை அணுக வேண்டும். மக்கள் கூட்டம் பாசீசத்தை புகழும் போது, அங்கு பாசீசக் கட்டமைப்பு உருவாக்கி விட்ட போலியான புகழ்ச்சியான அதே கண்ணோட்டத்தில் தான் பாசீசத்தையும் அணுகுகின்றனர். இங்கு தம்மைத் தாமாக வெளிப்படுத்தி இனம் காட்டமாட்டார்கள். கடுமையான கண்காணிப்புடன் கூடிய பாசீச கட்டமைப்பில், மக்கள் அப்படித் தான் இருப்பார்கள். எங்கும் ஒரு மயான அமைதியுடன் கூடிய மௌனம் நீடிக்கும். இதை நாம் நிச்சயமாக புரிந்து கொள்வது அவசியமானது, அடிப்படையானது.

இதை புரிந்து கொள்ளாத செயலற்ற தன்மையில் இருந்து, பிதற்றுவதால் எதுவும் நடக்காது. இந்த நிலையிலும் மோதல்களும் முரண்பாடுகளும் பாசீச அமைப்புகளில் ஏற்படுவது தவிர்க்கமுடியாது. ஆனால் பாசீசம் தனது சொந்த முரண்பாட்டால் ஒரு நாளும் தானாக சிதைந்துவிடுவதில்லை. ஏனெனில் அதன் கட்டமைப்பு பாசீச வழிகளில் உருவானதால், தனது சொந்த முரண்பாடுகளை அதே வழியில் எதிர் கொள்ளும் திறனை அது கொண்டுள்ளது. இலகுவாகவே, அதை இயல்பான பாசீச வழிகளில் இல்லாதாக்கிவிடுகின்றது. இங்கு எந்த கூச்சலும், அதிர்வும் நடப்பதில்லை. சமூக முரண்பாடுகள் தானாக ஒடுக்கு முறையை தீர்க்கும் என்ற கற்பனை போலியானது. அதே போல் அவர்களின் ஆதிக்கத்தில் உள்ள மக்கள், ஒரே நாளில் பாசித்துக்கு எதிராக வந்துவிட மாட்டார்கள். மாற்று அரசியல் வழி சரியாக பாசீசக் கட்டமைப்புக்குள் ஊடுருவி பிளக்காத வரை, மக்கள் கூட்டம் பாசீசத்துக்கு எதிராக சுட்டு விரலைக் கூடா நீட்டாது. மாறாக தன்னை அதனுடன் இணைந்து இருப்பதாக பாசாங்கு செய்தும், போலியான புகழ்ச்சிகளை அள்ளியும் வழங்கும். இது மக்கள் தமது இருப்பிற்கான ஒரு வழியாக காண்கின்றனர்.

பாசீசத்தில் ஏற்படும் முரண்பாட்டை அகலப்படுத்த வேண்டும். இது பாசீச அமைப்பின் உள் கட்டமைப்பில், மக்கள் சார்ந்த அன்றாட வாழ்வியல் அடிப்படை விடையத்தில் உருவாக்கப்பட வேண்டும். பாசீச அரசு இயந்திரம் வர்க்க உறவுகளில் இருந்து கட்டமைக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொண்டால், பாசீசம் நிரந்தரமானதோ, நிலையானதோ, நீடிக்கக்கூடியவையோ அல்ல என்பதை புரிந்து கொள்ளமுடியும். வர்க்க உறவுகள் பாசீச கட்டமைப்பில் எப்போதும் எதிர்மறையில் முரண்பாட்டை தோற்றுவித்த வண்ணமே இருக்கும். இதை சரியாகவும், நுட்பமாகவும் புரிந்து கொண்டு பிளவுகளை ஆழமாக்க வேண்டும். பாசீசத்தைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்ட நபர்கள் எப்போதும், இந்த வர்க்க உறவுகளில் இருந்து விலகியிருப்பவர்கள் அல்ல. அதற்குள் தான் இருப்பதால், மக்கள் நலன்களை முன்நிறுத்துவதன் மூலம், பாசீச கட்டமைப்பிலும் வெடிப்புகளையும் ஏற்படுத்த முடியும். பாசித்தின் மேல் உள்ள முரண்பாட்டை சரியாக பிளப்பதன் மூலம், பாசீசத்துக்கு எதிராக செயல்படுவதை அத்தியவசியமாகும்.

பாசீசத்தின் இந்த சமூக அடிப்படை புலிகளுக்கும் அப்பட்டமாக அப்படியே ஒவ்வொரு விடயத்திலும் பொருந்தும். இதை சிலர் மறுக்கின்றனர். குட்டிபூர்சுவா வர்க்கத்தின் ஜனநாயக இயக்கமாக புலிகள் உள்ளனர் என்பது முற்றாகவே தவறானது. குட்டிபூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதியாக புலிகள்

www.tamilarangam.net



இருந்தாலும், புலிகளின் அரசியல் நோக்கம் இதுவல்ல. இது கூட பாசீசத்தின் முக்கியமான அடிப்படைப் பண்பாகும். புலிகள் இன்றும் குட்டிப் பூர்சுவா அடித்தளத்தில் இருந்தே ஆட்களை கவர்ந்து இழுக்கின்றனர் என்பது உண்மையே. ஆனால் குட்டிப் பூர்சுவா வர்க்கத்தின் ஜனநாயகப் புரட்சியை, புலிகள் ஒரு துளி தன்னும் தனது அரசியலாக வரிந்து கொள்ளவில்லை. மாறாக இருக்கும் தரகுமுதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில், பூர்சுவா ஜனநாயக பண்பியலின் கூறுகளைக் கூட ஒழித்துக் கட்டியுள்ளனர். இதன் முன்னைய நிலைக்கு கூட, புலிகளால் மீள மீட்க முடியாது. பொருளாதார கட்டமைப்பில் கூட இதுவே நிகழ்கின்றது. தேசிய உற்பத்தியை முற்றாக ஒழித்துக் கட்டுகின்றனர். தேசிய வளங்களை ஏகாதிபத்தியத்திடம் தாரைவார்க்கின்றனர். இதை பொதுவான சமூக கட்டமைப்பில் செய்துவிட முடியாது என்பது, அனைவரும் நன்கு அறிந்ததே. பாசீச சமூக கட்டமைப்பு மூலம் தான் அனைத்தும் நிறைவு செய்யப்படுகின்றது. இதை புலிகள் எப்படி சாதிக்கின்றனர். குறுந் தேசிய பாசீச வெறியை முன்தள்ளி, குறுந் தேசிய யுத்தம் பற்றி பீற்றிக் கொண்டே, முற்று முழுதாகவே தேசிய வளங்கள் அதன் ஜனநாயக கூறுகளை எல்லாம் அழித்து விடுகின்றனர்.

பாசீசத்தை அடிப்படையாக கொண்ட நாசிக்களின் தலைவரான கிட்லரின் தோழரான முக்கிய கிழட்டு நாய் கோயரிங், மக்களின் அடிப்படை உரிமைகளை எப்படி பறிப்பது என்பதை வழிகாட்டினான் அவன் அதை அழகாகவே "தலைவர்கள் தாம் விரும்பியபடியெல்லாம் மக்களை ஆட்டுவிக்கமுடியும்... நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். நாம் தாக்கப்படுகிறோம் என்ற சொல்லுங்கள். சமாதானம் பேசுபவர்களுக்கு நாட்டுப்பற்று இல்லையென்றும், நாட்டை ஆபத்துக்கு உள்ளாக்குகிறார்கள் என்றும் தூற்றுங்கள். இந்தச் சூத்திரம் எந்த நாட்டிலும் வேலை செய்யும்" என்றான். இது புலிகளுக்கு மட்டுமல்ல, இந்தியா இந்து பாசிட்டுகளுக்கும், சியோனிச இஸ்ரேலுக்கும், ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கும் கூட பொருந்தும். இதைத் தான் இவர்கள் தத்தம் அரசியல் ஆணையில் எப்போதும் வைக்கின்றனர்.

## புலிகள் பாசிட்டுகளே ஒழிய ஒரு மக்கள் இயக்கமல்ல

புலிகள் இதன் அனைத்துக் கூறுகளையும் தமது அரசியலாக, பாசீச கட்டமைப்பில் வரிந்துள்ளனர். பொய்யும் புரட்டும் அனைத்திலும் அவர்களின் மூலமாக உள்ளது. எதிரியை பற்றி வாய் கிழிய கூறிக் கொள்வதன் மூலம், ஜனநாயகத்தை பறித்தெடுக்கின்றனர். மாற்றுச் சிந்தனையை முன் வைத்து, தேசத்தின் அடிப்படை பொருளாதார நலன்களைப் பற்றி பேசும் போது, நாட்டுபற்று அற்ற துரோகி என முத்திரை குத்துகின்றனர். நாசிகளைப் போல் அவர்களை கொன்று அழிக்கின்றனர்.. புலித் தலைவர்கள் தாம் விரும்பியதை எல்லாம் செய்கின்றார்கள் என்றால், அங்கு கிட்லரின் பாசீச கட்டமைப்பை தமிழ் மக்கள் மேல் நிறுவிய, ஒரு சர்வாதிகார நிலையில் தான் சாத்தியமானது.

புலிகளின் பாசீச சித்தாந்தம் மிகவும் உறுதியானதும், முழுமையானதும், சீரானதுமாக, முன் கூட்டியே திட்டமிட்ட ஒரு கோட்பாடு அல்ல. மாறாக இந்த தத்துவம் பச்சோந்தித் தனமானது. முன் கூட்டியே அனைத்தையும், குறித்த திட்டத்துக்கு அமைய உருவாக்கியதாக புலிப் பாசீசம் காட்ட முனைகின்றது. ஆனால் நேரத்துக்கும் நிலைமைக்கு இசைவாகவே, தனது நோக்கை அடைவதில் பாசீசம் தன்னை தகவமைக்கின்றது. நிலைமைகளுக்கு ஏற்ப தனது பச்சோந்தித் தனத்தை பயன்படுத்தி, அதை தான் முன் கூட்டியே திட்டமிட்டதாக காட்ட முனைகின்றது. இதை தனிமனிதனின் உன்னதமான அறிவியல் குணங்களின் சிறப்பாக காட்டி "மேதகு" களை தலை மேல் நிறுத்துகின்றனர். கொலை, கொள்ளை என்று சமூக அழித்தொழிப்புகளில், மிகவும் முன் கூட்டியே திட்டமிட்ட அழித்தொழிக்கும் பண்பை பாசீசம் வெளிப்படுத்துகின்றது என்பது உண்மையே. ஆக்கத்திற்கான முயற்சியில் எந்தவிதமான முன் கூட்டிய திட்டமிடுதலும் பாசீசத்தில் கிடையாது. பச்சோந்தி போன்ற நிலையில் நின்று, சமூக அடிப்படைகளை அபகரித்து தலைக்கு மேல் கொண்டு சென்று தமது மதி நுட்பமான செயலாக காட்ட முனைகின்றது.

www.tamilarangam.net



இதற்கு அடிப்படையாக பொய்யும், புரட்டும் புலிகளில் ஊறிப்போன ஒரு பாசீசப் பண்பாகி விட்டது. எதையும் எப்படி மறுப்பார்கள். அதை எப்படியும் எந்த விதத்திலும் புரட்டுவார்கள். இது அன்றாடம் இயல்பு வாழ்வில் சர்வசாதாரணமாக மக்கள் காணும் அடிப்படை உண்மையாக நீடிக்கின்றது. இதற்கு ஆதாரம் எதுவும் அவசியமற்றவை. இதை யுத்ததந்திரம் என்று அப்பட்டமாகவே நியாயப்படுத்துகின்றனர். போராட்ட காலத்தில் மக்களை மந்தைகளாக அடிமையாக வைத்திருப்பது, அவசியமுள்ளதாக கூறி நியாயப்படுத்தப்படுகின்றது. எல்லா விதமான மக்கள் சார்ந்த அமைப்புகளையும் தமது அமைப்புகளாக மாற்றிவிடுகின்றனர். அங்கு இருந்த கொஞ்ச நஞ்ச மனிதப் பண்பு சார்ந்த செயல்பாடுகளைக் கூட இல்லாதாக்கி விடுகின்றனர். தமது புகழ்களையும், தமது பாசீச வக்கிரங்களையும் ஆதரித்து அறிக்கைவிடும் றப்பர் முத்திரையாக மாற்றிவிடுகின்றனர். தனிப்பட்ட சொத்துரிமை சார்ந்த நல்ல லாபம் தரும் தொழில்களையும், நிலையான வளங்களையும் கூட அபகரித்து விடுகின்றனர். எங்கும் பாசீசம் தனது இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி அடக்கிவைக்கின்றது. ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களுக்கு வாலாட்டி குலைத்தபடி, தரகராக செயல்பட எல்லா விதமான சமூக அழித்தொழிப்பையும் செய்கின்றனர். இதை சாதிக்க பெரும் நிதி மூலதனத்தை திரட்டுகின்றனர். வரியாகவும், மறு தளத்தில் சொத்தையும் நிதியையும் அபகரிப்பதன் மூலமும், சந்தையை தான் மட்டும் வைத்திருப்பதன் மூலமும், ஏழை மக்களுக்கு பல்வேறு வழிகளில் கிடைக்கும் சமூக உதவிகளின் ஒரு பகுதியை கைப்பற்றுவதன் மூலமும், கூலியில் ஒருபகுதியை அபகரிப்பதன் மூலமும் எங்கும் எதிலும் நிதி மூலதனத்தை, புலிப் பாசிஸ்ட்டுகள் பாசீச வழிகளில் அடாத்தாக திரட்டுகின்றனர்.

பாசீசத்துக்கும் நிதி மூலதனத்துக்கும் உள்ள உறவு பிரிக்க முடியாத பண்புகளைக் கொண்டது. "பாசீசம் என்பது நிதி மூலதனத்தின் மிகவும் பிற்போக்கான, மிகவும் இனவெறி கொண்ட, மிக மோசமான ஏகாதிபத்திய சக்திகளின் அப்பட்டமான பயங்கரவாத சர்வாதிகாரமாகும்" என பாசித்ததை டிமிட்ரோவ் வரையறை செய்த இந்த தீர்மானத்தை சர்வதேச கம்யூனிச அகிலம் அங்கீகரித்தது. இது மேற்கு நாட்டில் ஏற்படும் பாசீசத்தை சிறப்பாக தோலுரிக்கின்றது என்றாலும் இது புலிகளுக்கும் பொருந்திவிடுகின்றது. இங்கு புலிகள் இந்த மேற்கு நாடுகளின் கைக்கூலிகளாக இருப்பதன் மூலம், பாசீசத்தின் சர்வதேச இணைப்பாகவே மலர்கின்றனர். ஏகாதிபத்திய சுரண்டல், சூறையாடலுக்கு கம்பளம் விரிந்து அதை பாதுகாக்கும் பாசீசத்தை, புலிகளின் வழிகளில் சதிராட்டம் போடுகின்றனர். அதாவது புலிகள் குறுந்தேசிய இனவெறியை மிகவும் பிற்போக்கான வடிவில் கையாள்வதுடன், மக்களை கொள்ளையடிப்பதன் மூலம், ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கான செயல்களுக்கு துணையாக புலிகள் நிற்கின்றனர்.

இந்த துணை போதல் என்பது இன்னமும் மறைபொருளாக இருக்கின்றது. அப்பட்டமான கைக்கூலிகளாக மாறுவது இன்னமும் முழுமையாக அம்பலமாகிவிடவில்லை. இதனால் பலர் இதை நிராகரிக்கவும், மறுத்து கருத்துரைக்கவும், இதை வெறும் யூகம் என்ற கூறி பாசீசத்தை மூடிமறைக்கின்றனர். இது அம்பலமாகாது மறை பொருளாக நீடிப்பதற்கு யுத்தம் ஒரு அடிப்படையான காரணம். ஏகாதிபத்திய விசுவாசமான இரண்டு சக்திகளிடையே நடக்கும் யுத்தத்தில் சட்டபூர்வமான பிரிவை ஏகாதிபத்தியங்கள் சார்ந்து நிற்பதால், இந்த மயக்கம் குழப்பம் தொடருகின்றது. புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அரசு வழங்கிவிடும் அந்த கணம் முதல், புலிகளின் அப்பட்டமான ஏகாதிபத்திய சேவை நடைமுறை ரீதியாக அனைவரும் தெரிந்து கொள்வது ஒரு பொதுவான நடைமுறையாகிவிடும். ஆனால் இந்தப் போக்கு அம்பலமாகாத நிலையிலும், ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக இருப்பதால் தான் புலிகள் பாசிஸ்ட்டுகளாக நீடிக்கின்றனர். இது உள்நாட்டு விவகாரங்கள் முதல் சர்வதேச நிலைப்பாடுகள் வரை புலிகள் ஏகாதிபத்திய விசுவாசத்தை எப்போதும் பறைசாற்றியே வந்துள்ளனர். தேசம், தேசிய நலன் எதையும் புலிகள் தமது போராட்ட வழியில் கொண்டிருக்கவில்லை. புலிகளின் பாசீச நலன்களை தேசிய நலனாக காட்டி போராடுவதற்கு அப்பால், உயிருடன் வாழும் மக்களின் அடிப்படையான தேசிய

www.tamilarangam.net



நலனுக்காக புலிகள் ஒரு துளிதன்னும் போராடவில்லை என்ற உண்மை மக்களின் வாழ்வுடன் விதிவிலக்கின்றி இணைந்து நிர்வாணமாகவே உள்ளது.

மிகவும் பிற்போக்கான சமூகப் போக்கை கட்டமைப்பதே பாசீசத்தின் கோட்பாடாக எப்போதும் உள்ளது. இன்று எமது தமிழ் மண்ணில் மிக பிற்போக்கான ஒரு சமூக உள்ளடகத்தை புலிகள் நிறுவியுள்ளனர். ஒவ்வொரு மனிதனினதும் இந்த மண்ணில் வாழும் உரிமை என்பது, புலிகளைப் போல் விதிவிலக்கற்ற ஒன்று. சக மனிதனுக்கு பாதகமல்லாத, சக மனிதனின் நலனை உள்ளடக்கிய ஒரு மனிதன் இயல்பாக வாழும் உரிமையை எம் மண்ணில் கிடையாது. பாசீசம் இந்த உரிமையை மிகப் பிற்போக்கான நடைமுறைகள் மூலம் அடக்கி ஒடுக்குகின்றது. விரல் விட்டு எண்ணி விடக் கூடிய கொள்ளைக்காரர்களின் வாழ்வை பாதுகாப்பதே, புலிகளின் பொது அரசியலாகிவிட்டது. பணத்தை யார் அதிகமாக புலிகளுக்கு தாரை வார்க்கவும், அந்த பணத்தைக் கொண்டு கூட்டுக் கொள்ளை அடிக்க தயாராக யார் உள்ளனரோ, அவர்களின் ஆட்சியை நிறுவ மக்கள் மேலான மிக பிற்போக்கான பாசீச சர்வாதிகாரத்தையே புலிகள் நிறுவியுள்ளனர்.

உண்மையில் பாசீசத்தை புலிகள் எதன் மீது, எதை அழித்து நிறுவினர். ஜனநாயகக் கோரிக்கை ஒரு சமூக நடைமுறை கோரிக்கையாக உயருகின்ற போதே, அதை வலதுசாரிகள் தமது நலன்களுக்கு இசைவாக பாசீச சர்வாதிகாரத்துக்கு வித்திடுகின்றனர். புலிகளின் வரலாற்றில் இது சொந்த இயக்கத்தில் ஆரம்பம் முதலே தோற்றம் பெற்றது. அதற்கு முன்பாக கூட்டணி என்ற குறுந்தேநசியவாத கட்சியின் உள் இருந்தே, இதை புலிகள் சுவீகரித்துக் கொண்டனர். சொந்த இயக்கத்தில் எழுந்த ஜனநாயகக் கோரிக்கைக்கு பதிலாக, படுகொலையை துரோக முத்திரை இட்டு பரிசாக வழங்கப்பட்டது. இதுவே சம காலத்தில் இயக்க மோதலாகவும், மக்களுக்கு எதிரான பாசீச சர்வாதிகாரமாகவும் மாறியது. இங்கு மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகள் ஈவிரக்கமின்றி அழித்தன் மூலம் உருவான சம்பல் மேடுகளில் தான், புலிகளின் பாசீச சர்வாதிகாரம் நிறுவப்பட்டது.

எந்தவிதமான ஜனநாயக உரிமையையும் "மேதகு" தலைவர் பிரபாகரனின் பாசீச தமிழீழத்தில், யாருக்கு வழங்கியது கிடையாது. இதை யாரும் மறுத்து நிறுவமுடியாது. இது தான் தமிழீழத்தின் சட்ட ஒழுங்காகவும், மக்கள் மந்தையாக பாசீசத்துக்கு தலையாட்ட தெரிந்து கொள்வதுமே, தமிழ் மக்களின் தேசியப் பண்பாக புலிப் பாசிட்டுகள் உருவாக்கியுள்ளனர். இதைத் தான் "மேதகு" புலித் தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களுக்கு ஓட்டு மொத்தமாக தேசியத்தின் பெயரில் வழங்கியுள்ளார்.

**புலிப் பாசிட்டுகளின் தோற்றம் ஒரு வரலாற்று நீட்சியே**

புலிகள் எப்படி ஒரு பாசீச இயக்கமாக உருவானார்கள் எனப் பார்ப்போம். முதலில் இதை நாம் இதன் வரலாற்று கூறில் இருந்து குறிப்பாக பார்ப்போம். சண் தலைமையிலான இடதுசாரி இயக்கம் வடக்கில் நடத்திய சாதிப் போராட்டங்கள், தேசியத்தை முன்வைத்து வந்த தேசிய வலது பிரிவுகளின் நிலப்பிரபுத்துவ மற்றும் தரகு வர்க்க நலன்களுக்கு பலத்த நெருக்கடியை உருவாக்கியது. இதே போன்று இலங்கை அளவில் தொடர்ச்சியாக பல குழுக்களின் இடதுசாரி போராட்டங்கள் சுரண்டும் வர்க்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கியது. இதை முறியடிக்க வலது பிரிவுகள் இனம் கடந்து, இன மோதலை உருவாக்கினர். இலங்கையில் 1960க்கு பிந்திய பத்தாண்டின் இறுதியில் நடந்த வர்க்கப் போராட்டங்கள், வலதுபிரிவை ஒற்றுமைப்படுத்தியது. அமைதியான வழியில் இனப்பிரச்சனையை தீர்க்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. சிறிமா சஸ்த்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்களின் பிரச்சனைக்கு, அமைதியாக அந்த மக்களின் விருப்பத்துக்கு மாறாக நாடு கடத்தல் என்ற தீர்வு எட்டப்பட்டது. மலையக பிரதிநிதிகளுக்கு சலுகைகள் வழகுவதன் மூலம் இந்த அமைதியான வக்கிரமான தீர்வுகளை அமுல் நடத்த, மந்திரி சபையில் இணைப்பது என பல சலுகைகள் வழங்கப்பட்டது. ஜே.வி.பி நடத்திய போராட்டம் உட்பட ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் கூர்மையான போது, வலது பிரிவுகள் தமக்குள் ஒற்றுமை கண்டனர். இந்த ஒற்றுமை மூலம் இடது போராட்டங்களை ஒடுக்க விரும்பினர்.

www.tamilarangam.net



தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கில் சாதிய போராட்டங்களை எதிர் கொண்ட போது, அரசு மற்றும் பொலிஸ் உதவியை நாடி நின்றனர். இதை ஒடுக்குவதற்கு பாசீச அரசின் உதவியை நாடிய அதேநேரம், மக்களைப் பிளக்க வலதுசாரிகள் விரும்பினர். தமிழ் பகுதிகளில் சாதிப் போராட்டங்களால் வர்க்க அடையாளம் கண்டு அணி திரள்வது கூர்மையானது இது போல் சிங்களப் பகுதியிலும் இது காணப்பட்டது. அதே நேரம் ஜே.வி.பியின் இடது போராட்டங்களும் கூர்மையாக வளர்ச்சி பெற்றது. தமிழ் சிங்கள தலைவர்கள் இதை தடுக்கும் அரசியல் வழிகளைத் தேடினர். இனப் பிளவை ஏற்படுத்தி மக்களை பிளக்க, இரு பகுதியினரும் குறிப்பாக ஒரே நேரத்தில் முன்கையெடுத்தனர். வர்க்கப் போராட்டங்கள் கூர்மையடைந்ததால், வலது பிரிவுகள் தமது வர்க்க அரசியலாக இனப் பிளவுகளை ஆணையில் வைத்தனர். 1970 களில் நடந்த தேர்தலில், நாட்டில் நிலவிய பொதுவான அரசியல் மயமாகாத இடதுசாரிய கண்ணோட்டம் சார்ந்த ஆட்சியை மாற்றி அமைத்தது.

நாட்டில் இருந்த இடதுசாரிப் போக்கு, வலதுசாரிகளுக்கு நெருக்கடியை உருவாக்கியது. 1970 இல் ஆட்சிக்கு வந்த இடதுசாரி அரசாங்கம், வர்க்கப் போராட்டத்தின் அரசியல் அடிப்படைகளை தகர்க்க தேசியவாதத்தை முன் தள்ளியது. இதில் தேசிய உற்பத்தி என்ற பெயரில், சில இறக்குமதிகளை தடை செய்தது. தேசிய கல்வி போன்ற பல்துறை சார்ந்து கட்டுமானங்களை மேல் இருந்து மக்கள் மேல் திணித்தனர். அதே நேரம் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட தரப்படுத்தல் முதல் பலவற்றைத் திணித்தனர். இதை அமுல் செய்ய முன்பாகவே ஜே.வி.பியை சேர்ந்த 20 ஆயிரம் பேரை கொன்றதுடன், சண் தலைமையிலான கட்சியை சிறையில் தள்ளியது. உண்மையில் எழுந்து வந்த இடதுசாரி வீச்சை அடக்கியொடுக்கியபடி, வலது மற்றும் இடது கண்ணோட்டம் சார்ந்த வகையில் உற்பத்தி மற்றும் நடைமுறைகளை மேல் இருந்து திணித்தது. மறுதளத்தில் இளைஞர்களை திசை திருப்ப இனவாதத்தை ஒரு சமூக கண்ணோட்டமாகவே திணித்தனர். இதனால் இடது கண்ணோட்டம் நாட்டில் முற்றாக சிதைந்து சீரழிந்தது. வலது கண்ணோட்டம் முன்னணிக்கு வந்தது. ஆனால் உற்பத்திதுறை சார்ந்த சில இடது கண்ணோட்டம், உழைக்கும் மக்களைச் சுரண்டும் வலது கண்ணோட்டத்துக்கு ஆழமான நெருக்கடியைக் கொடுத்தது. சர்வதேச நெருக்கடிகளும் இணைந்து கொள்ள, சுரண்டல் என்பது தரகுத் தன்மை சார்ந்து வளர்ச்சி பெறமுடியாத நிலை நீடித்தது. சர்வதேச ரீதியாக எண்ணை நெருக்கடி, உலகை மேலும் ஆழமாக சுரண்டுவதன் மூலம், மூலதனத்தின் இழப்பை ஈடுசெய்ய கோரியது. ஆனால் இலங்கையில் அரசின் சில கொள்கைகள் இதற்கு தடையாக இருந்தது. வலது கண்ணோட்டம் உலகளவிலும், உள் நாட்டிலும் ஆழமான கோரிக்கையை முன்வைக்க தொடங்கியது. இலங்கையில் வலதுசாரிப் பிரிவுகள் தத்தம் இனப்பிரிவு சார்ந்து தம்மை நுட்பமாக ஒருங்கிணைத்துக் கொண்டன. இடதுசாரி அரசின் இனவிரோதக் கொள்கை இதற்கு எண்ணை வார்த்தது. இனம் சார்ந்து வலது குழுக்களின் நடவடிக்கைகள் சுறுசுறுப்பாகியது.

இனப்பிளவு மேலும் துல்லியமாக பண்பு வழியில் வளர்ச்சி கண்டது. ஆனால் இந்த இனப்பிளவு சார்ந்த தேசிய அடிப்படைகள் எந்த விதத்திலும், தனது வலதுசாரி அரசியல் எல்லையை தாண்டவில்லை. மேல் இருந்து திணித்த பொருளாதார கொள்கைகள் எதிர்த்து வளர்ச்சி பெற்ற இனவாத வலதுபிரிவுகள், 1977 இல் தேர்தலில் பெரு வெற்றி பெற்றது. தமிழ் சிங்களம் என்று இன அடிப்படையில், இலங்கையில் உயர்ந்த பட்சமாக இனவாதம் வெற்றிபெற்றது. இந்த வெற்றி இடது எதிர்ப்பை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்ட, பாசீச கண்ணோட்டமாக வளர்ச்சி பெற்றது. இதில் தமிழ், சிங்களம் என்று வேறுபாடு இருக்கவில்லை. உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்டுவதற்கு, இந்த வலது பாசீச இனவாதக் கண்ணோட்டத்தை ஆளும் வர்க்க அரசியல் சித்தாந்தமாக வரிந்து கொண்டனர். இந்த போக்கிலான இனவாத அடிப்படையில் உருவான கட்சிகள், தத்தம் நிலையில் வலது நிலைப்பாட்டை உறுதியாக கொண்டன. இந்த வரலாற்று போக்குக்குப் பின்பாக, இலங்கையில் இடதுசாரிகளின் வர்க்க போராட்ட திசை மார்க்கம் இதுவரை மீண்டுவிடவில்லை.

www.tamilarangam.net



இன அடிப்படையில் தனது பாசீச கட்டமைப்பில் உருவான வலதுசாரி அரசாங்கம், என்று இல்லாத வகையில் இனவாதத்தை ஆணையில் வைத்தது. முன்னைய அரசின் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட அனைத்து கூறுகளையும் உள்வாங்கி, மேலும் ஆழமாக்கியதன் மூலம் சுரண்டலை தீவிரமாக்கியது. ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் நலன்களை பாதுகாத்து மக்களை கொள்ளையிடவும் சூறையாடவும் தாராளமாக அனுமதித்தது. வலது தமிழ் தலைமை தமிழ் மக்களை சூறையாட அனுமதிக்கும் உரிமையை தன்னிடம் தரும்படி கோரி, சமுகத்தை என்றுமில்லாத வகையில் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இருந்த சிங்கள அரசு தமிழ் மக்களை ஒடுக்கியபடி, ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்தது. இந்த போக்கில் அதிர்ப்தியுற்ற தமிழ் பிரிவு அந்த உரிமை தமக்கு உண்டு என்ற கோரினர். அதாவது ஏகாதிபத்தியத்தை எதிர்க்காத அதே நேரம் சிங்கள இன ஒடுக்குமுறையை எதிர்த்தனர். ஏன் சிங்கள அரசு இன ஒடுக்குமுறையைக் கையாளுகின்றது என்ற அடிப்படைக் காரணத்தை எதிர்க்காது, வடிவத்தை மட்டும் எதிர்த்தனர். இங்கு வர்க்க நலன்கள் துல்லியமாக குறிப்பாகவும் சேவை செய்தது. இந்த எதிர்நிலைத் தன்மை இனப் பிளவைக் கட்டமைத்தது.

தமிழ் தலைமை சலுகைகள் ஊடாக பேரம் பேசி, இதை சாதிக்க முனைப்பு பெற்றது. ஆனால் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் பற்றி பீற்றினர். இந்த முரண்நிலையை இனம் காணமுடியாத நிலையில் மக்களை மந்தைக் கூட்டமாக்கினர். அரசு இனவாத கண்ணோட்டத்தில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்ய மறுத்து, தான் மட்டுமே நேரிடையாக ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்து எலும்புகளை நக்கிக் கொள்வதை நடைமுறையாக்கினர். ஏகாதிபத்திய சுரண்டல் தீவிரமாக, அதற்கு நேர்வீகிதத்தில் இனவாதம் வளர்ச்சியுற்றது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரித்துச் சென்றது. இதை எதிர்கொள்ள பாராளுமன்ற தலைமையில் இருந்த இனவாதப் பிரிவால் ஈடுகொடுக்க முடியவில்லை. தமது தரகு அரசியல் வாழ்வு வன்முறைக்கு ஊடாக சிதைந்து போவதை, அவர்களில் வர்க்க அரசியல் வாழ்நிலை அனுமதிக்கவில்லை.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1970 களின் பின் இடதுசாரி வர்க்க கண்ணோட்டத்துக்கு எதிராகவும், பாராளுமன்றம் மேலிருந்து திணித்த தேசிய பொருளாதார கொள்கைகளுக்கு எதிராகவும், தனது வலதுசாரி இனவாத அடிப்படையில் தன்னைத் தான் ஒரு வன்முறைக்கு தயாரான அமைப்பாக காட்டிக் கொண்டது. இதனால் அந்த அமைப்பின் மீது மிகவும் தீவிரமான பற்றுக் கொண்ட குட்டிபூர்சுவா வர்க்க இளைஞர்கள், தீவிரமான செயல்களில் இறங்கினர். இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் வளர்ப்பு நாயாக இருந்தனர். முன்னைநாள் கதாநாயகர்கள் அனைவரும், கூட்டணியின் வளர்ப்பு நாய்கள் தான். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிரியாக யாரை காட்டினரோ, அவர்கள் மேல் வன்முறைகளை கையாளத் தொடங்கினர். வன்முறையில் ஈடுபட்டவர்கள் சிறை சென்ற போது, அவற்றை பாராளுமன்றத் தலைமை அறுவடை செய்தது. கூட்டணியின் வழிகாட்டுதலில் படுகொலை அரசியல் செய்தவர்களை பொலிஸ் தேடி அலைந்த போது, அவர்களை பாதுகாக்க மறுத்தனர். ஆனால் அவர்கள் பூர்சுவா வர்க்க இளைஞர்கள் முன் வீரர்களான போது, கூட்டணியினர் அதை அறுவடை செய்தனர்.

1970க்கு பின் தொடர்ச்சியான 10 வருடத்தில், குட்டிபூர்சுவா இளைஞர்களுக்கும், கூட்டணிக்கும் இருந்த உறவு மெதுவாகவே வெடிப்பு கண்டது. நெருக்கடிகளின் போது இளைஞர்களை காட்டிக் கொடுத்தனர். மற்றைய நேரத்தில் அரவணைத்து அனுசரித்து போன போக்கு, பிளவுக்கான அடித்தளமாக இருந்தது. சிங்கள இனவாத அரசு ஏகாதிபத்திய சுரண்டலை மேலும் ஆழமாக ஊடுருவிச் சுரண்டவும், சூறையாட உதவுகின்ற அதே வீச்சில், இனவாதத்தை மேலும் தீவிரமாக்கியது. இதை ஈடுகொடுக்க தமிழ் தலைமையான கூட்டணியால் முடியவில்லை. குட்டிபூர்சுவா வர்க்க இளைஞர்களுக்கும் கூட்டணிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டது. குட்டிபூர்சுவா இளைஞர்கள் கூட்டணிக்கு தெரியாத, தமது சொந்த ஆயுதக் குழுக்களை கட்டமைக்கவும் தொடங்கினர். ஆனால் அரசியல் ரீதியாக கூட்டணியின் வலது இனவாத அரசியலை தமது தேசியக் கொள்கையாக வரிந்து கொண்டனர். உண்மையில் போராட்டத்தில்

www.tamilarangam.net



வடிவ மாற்றம் ஏற்பட்டது. இந்த வடிவ மாற்றத்தில் எது வெற்றி பெறும் என்பது, இந்த இரண்டு பிரிவும் தீர்மானிக்கும் நிலையில் அன்று இருக்கவில்லை. சிங்கள அரசே அதில் எதை வளர்ப்பது என்பதை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. சிங்கள அரசு தன்னுடன் நேரடியாக அரசியல் ரீதியாக முட்டி மோதிய கூட்டணியின் அரசியல் வாழ்வை முடிவுக்கு கொண்டு வரவிரும்பியது.

கூட்டணியில் இருந்து தன்னை வேறுபடுத்தி குட்டிபூர்சுவா இளைஞர்கள், தமது அரசியலை கூட்டணியின் அரசியலாகவே வரிந்து கொண்டனர். போராடும் வடிவத்தில் மட்டும் தம்மை வேறுபடுத்தினர். வர்க்க அடிப்படையில் தரகு மற்றும் நிலப்பிரபுத்துவ அடிப்படையை கொண்டிருந்த கூட்டணி, குட்டிபூர்சுவா சிந்தனையுடன் பிரிந்த தீவிரவாத இளைஞர்களில் இருந்த வேறுபட்டது உண்மைதான். ஆனால் குட்டிபூர்சுவா இளைஞர்களின் சிந்தனைக்கும் நடைமுறைக்குரிய சமூக அடிப்படை இன்மையால், அதை இனம் காண முடியாத கூட்டணியின் அரசியலால் வழிநடத்தப்பட்டு இருந்தால், கூட்டணியின் அரசியல் எல்லையை தாண்டிவிட இவர்களை அனுமதிக்கவில்லை. கூட்டணி தனது வர்க்க அடிப்படையில் இருந்த உருவான பொருளாதார நலன்கள், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதை தடுத்தது. ஆனால் இளைஞர்கள் வர்க்க அடிப்படைக்கான பொருளாதார அடிப்படை இன்மையால், விரைவாக ஆயுத போரட்டத்தில் ஈடுபடுவதை துரிதமாக்கியது. இது இன்று வரை எதார்த்தமான அரசியலாக உள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தில் வடிவ மாற்றத்தை மட்டும் இந்த பூர்சுவா இளைஞர்கள் ஏற்படுத்தினர். சித்தாந்த ரீதியாக, பழைய அதே கொள்கையை தமது கொள்கையாக இன்றுவரை கொண்டு உள்ளனர். கூட்டணியின் நிலப்பிரபுத்துவ தரகு தன்மையை ஆதாரமாக கொண்ட அதே தளத்தில் குட்டிபூர்சுவா கனவுகள் வெளிப்பட்ட போது எல்லாம், அவை படுகொலை அரசியலுக்குள் அழிக்கப்பட்டன. கூட்டணியின் வர்க்க சித்தாந்தமே புலியின் சித்தாந்தமாக இன்றும் காணப்படுகின்றது. பிரபாகரன் அமிர்தலிங்கத்தின் நாயாக வாழ்ந்த காலத்தில் எதை தனது அரசியலாக வரிந்து கொண்டிருந்தரோ, அதுவே இன்று "மேதகு" தேசிய தலைவரான பின்பும் நீடிக்கின்றது. இதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலபிரபுத்துவ தரகு கண்ணோட்டம் சார்ந்த குட்டிபூர்சுவாக் கனவு, பாசீசத்தின் மைய ஊற்று மூலமாகும. இந்த குட்டிபூர்சுவா உதிரிக் கனவுகளை உள்ளடக்கிய தனது அரசியல் வழியை நேரடியாக கூட்டணியில் இருந்து பெற்றமையால், இது இடது தன்மைக்கு எதிரான அடிப்படைக் கோட்பாட்டில் இருந்தே தன்னை தகவமைத்துக் கொண்டது. இன்றைய புலிகளின் "மேதகு" தலைவர் பிரபாகரன் உட்பட பலரும் கூட்டணியின், வளர்ப்பு நாய்களாகவே இருந்தவர்கள் தான். சொன்னதை வாலாட்டியபடி ஈவிரக்கமின்றி செய்தவர்கள் தான் இவர்கள்.

1970 களில் குட்டிபூர்சுவா வர்க்க இளைஞர்கள் ஆங்காங்கே குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூட்டுகளை நடத்தினர். இதற்கு பலியானவர்கள் அனைவரும் கூட்டணியின் அரசியல் எதிரிகளாக இனம் காட்டப்பட்டு, துரோகியாக முத்திரை குத்தப்பட்டவர்களே. இங்கு துரோகிகள் யார் என்றால், கூட்டணிக்கு எதிரான கருத்துடையோராக இருந்தோரை குறித்து கருதப்பட்டது. கூட்டணியின் கருத்துக்கு எதிரானவர்கள், தேசியத்தின் எதிரிகளாக கருதி அழிக்கப்பட்டனர். பாசீசத்தின் உள்ளடகத்தை கூட்டணியின் அரசியல் வெளிப்படுத்தி நின்றது. கூட்டணியுடன் முரண்பட்டவர்கள் தேசியத்தின் எதிரியாக அடையாளம் காட்டினர். இவர்கள் தொடர்ச்சியாக கொல்லப்பட்டனர் அல்லது துரோக முத்திரை இடப்பட்டனர். இப்படி முத்திரை இடப்பட்டவர்களை தேடி அழிப்பது, தமிழ் தேசிய போராட்டமாக, அதுவே ஆயுதப் போராட்டமாக வளர்க்கப்பட்டது. இங்கு இந்த தேசியம் பாராளுமன்றத்துக்கு வெளியில், ஆயுதப் போராட்டமாக பரிணமித்து வந்த காலத்தில், துரோகம் என்பது ஒரு குறித்த கட்சிக்கு எதிரானதை மட்டுமே விளிக்கப்பட்டது. அரசியல் ரீதியாக இந்த துரோகம் என்பது வரையறுக்கப்பட்டவில்லை. பாராளுமன்ற அரசியலுக்கு பதில் ஆயுதப் போராட்டம் வளர்ச்சி பெற்று, அதுவே தமிழ் மக்களின் அதிகார பிரதிநிதியாக மாறிய போதும் சரி, துரோகம் என்பது ஒரு குறித்த கட்சிக்கு அல்லது இயக்கத்துக்கு எதிரானதை அடிப்படையாக கொண்டு வரையறுக்கப்பட்டது. தேசிய அரசியல் என்ன என்பதில் இருந்து, துரோகம் இன்று வரை

www.tamilarangam.net



வரையறுபக்கப்படவில்லை. இந்த துரோகம் மக்களின் அடிப்படையான சமூக நலன்களில் இருந்து, வரையறுக்கப்படவில்லை.

பாசீசத்தின் பண்பியல் கூறுகள் கூட்டணியின் வலதுசாரி அரசியலில் இருந்தே உருவாகியது. தரகுமுதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் நலன்களை சார்ந்து நின்ற கூட்டணி, ஏகாதிபத்திய நலன்களுக்காக மக்களிடையே பிளவை எண்ணை ஊற்றி வளர்த்தனர். இனவாதத்தை மூலதனமாக்கினர். இதே போன்ற சிங்கள அரசு இனவாதத்தை அடிப்படையாக கொண்டு தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சக்திகளை பேணி பாதுகாத்தது. இதன் மூலம் ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கத்தை நிறுவும் ஒரு பகுதியாக, இலங்கையிலும் ஆழமாக ஊடுருவி மறு காலனியாதிக்கத்தை விரைவுபடுத்தி வருகின்றது.

இந்த நிகழ்ச்சி நிரலை துல்லியமாக்க, இரு தரப்பினரும் பாசீசத்தை ஒரு சமூகக் கூறாக தத்தம் இனவாத செயல்பாட்டில் மையக் கூறாக கட்டமைத்தனர். கூட்டணியின் பாராளுமன்றம் சார்ந்த போராட்டமும், குட்டிபூர்சுவா இளைஞர்களின் ஆயுதம் ஏந்திய தனிநபர் பயங்கரவாத போராட்டமும் அக்கம் பக்கமாக நிலவின. இந்த இரண்டு போக்கும் ஐக்கியப்பட்ட வழிகளில் நடைபோட்டன. இந்த இனவாதப் போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியை மிஞ்சும் வகையில், சிங்கள இனவாதம் தன்னை விரிவுபடுத்திய போது, தமிழ் இனவாதத்தின் உள்ளான நெருக்கடி ஆரம்பமாகியது. ஆயுதம் ஏந்தியோருக்கும், பாராளுமன்ற வாதிகளுக்கு இடையில் முரண்பாடு பரிணமித்தது. இந்த முரண்பாடு படிப்படியாகவே வளர்ச்சி பெற்றது. தமிழ் மக்கள் மேலான அதிகாரம், ஒன்றில் இருந்து ஒன்று கைமாறிய போக்கு படிப்படியாக நிகழ்ந்தது. இந்த நிகழ்வும் அதன் வளர்ச்சியும் கூட பாசீச வழிகளில் அரங்கேறியது. இங்கு துரோகம் என்பது மீண்டும் கட்சி சார்ந்தாக இருந்தது. அரசியல் வழிப்பட்டதாக மாறவில்லை. அதாவது எந்தக் கட்சி மற்றவர்களை துரோகி என்று முத்திரை குத்தி அழித்ததோ, அந்தக் கட்சிக்கு மேல் ஆயுதம் ஏந்திய குழுக்கள் துரோக முத்திரை குத்தினர். ஆனால் அரசியல் ரீதியாக எந்த விமர்சனமும் இருக்கவில்லை. இது இன்று வரை தொடர்கின்றது. இது பின் தனிநபர் அதிகாரம் வரை விரிவு பெற்றது. அதாவது தலைவர் யார் என்ற அதிகாரப் போட்டி மட்டும், துரோக முத்திரை குத்தி அழிக்கப்படுவதை நியாயப்படுத்துவதே தேசிய அரசியலாகியது.

1. தேசியம் என்றும் அரசியல் வழிப்பட்டதாக அடையாளம் காணப்படவில்லை.

2. துரோகம் என்பது குறித்த கட்சிக்கு எதிரானதாகவும், தனிப்பட்ட ஒரு தலைவருக்கு எதிரானதாகவும் வரையறுக்கப்பட்டதே ஒழிய, அரசியல் வழிப்பட்டதாக இருக்கவில்லை.

3. ஆயுதம் ஏந்திய பூர்சுவா இளைஞர்களின் கைகளுக்கு, தமிழ் மக்கள் மேலான தேசிய அதிகாரம் கைமாறிய போது, கூட்டணியின் அரசியல் வழியில் இருந்து தன்னை சுய விமர்சனம் செய்யவில்லை. அதே அரசியலை தொடர்ச்சியாக பேணினர். இதை அடையும் வழியை மட்டும் மாற்றினர்.

4. மக்களை அடிமைப்படுத்துவது, அவர்களின் உழைப்பை சூறையாடுவது, சமூக ஒடுக்கு முறைகளை தொடர்ந்து பேணுவது என்ற தமிழ் தேசிய பாராளுமன்ற வழிகளில் இருந்து, குட்டிபூர்சுவா இளைஞர்களின் கைக்கு அப்படியே இடம் மாறியது. இது பாராளுமன்ற வழிகளுக்கு பதில் துப்பாக்கி முனையிலான ஒடுக்கு முறையாக மாறியது. இது அன்றாடம் வெளிப்பட்டலும், மக்கள் நடைமுறையில் உணர்ந்தாலும், சிங்கள இனவாத பாசீசத்தால் மூலமிடப்பட்டுள்ளதால் தன்னை மூடிமறைக்கின்றது.

கைமாறிய அதிகாரம் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கச் சார்பை, கூட்டணியிடம் கைமாற்றி அப்படியே ஆணையில் வைத்தது. அதே நேரம் குட்டிபூர்சுவா வர்க்கத்தின் நலன்களையும் ஒன்று இணைத்த கலவையாக தன்னை இனம் காட்டியது. இதன் வளர்ச்சி என்பது ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களை உருவாக்கியது. ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் வெளவேறு

www.tamilarangam.net



ஏகாதிபத்திய தரகுகளாக செயற்படும் வரையறையை, தமது அரசியலாக வரையறுத்துக் கொண்டன. ரூசியா மற்றம் அமெரிக்க நலன்களை அடிப்படையாக கொண்டு உருவான இக் குழுக்கள், இடைநிலை பிரதிநிதிகள் ஊடாக வழிநடத்தப்பட்டனர். இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடுகள் முதல் மாபிய குழுக்கள் என்று ஒரு விரிந்த தளத்தில் இடைத் தரகு குழுக்களே, இந்த குட்டிபூர்சுவா இளைஞர்களின் அரசியலை நடவடிக்கைகளை வழிநடத்தினர். இந்த முரண்பட்ட குழுக்கள் முரண்பட்ட கலவைக் கோட்பாடுகளை முன் தள்ளினர். இந்த முரண்பாடுகள், கலவையான கோட்பாட்டின் ஒருமைக்குள் நகர்த்தியது. இதற்கு வெளியில் இடது வழியில் ஒரு சில குழுக்கள் உருவானது. இது விதிவிலக்கு மட்டுமே.

இப்படி உருவாகிய இந்த குட்டிபூர்சுவா வர்க்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பை என்றும் முன் வைத்ததில்லை. உள்நாட்டு எதிரிகளை அடையாளம் காட்டவில்லை. இனவாத எல்லைக்குள மொழி ரீதியாகவே எதிரியை அடையாளம் காட்டினர். எதிரியை பற்றி தெளிவற்ற நிலையில், உருவாகிய ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள், தமது அரசியல் வழியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியாகவும், குட்டிபூர்சுவா நலன்களையும் ஒன்று இணைத்து ஒரு கலவையாக தன்னை ஒழுங்கமைத்தது. இவை அனைத்தும் தேசிய நலனை, அதாவது மக்களின் அடிப்படையான தேசிய நலனை முன்வைத்து போராட முன்வரவில்லை. மாறாக மக்களின் அடிப்படையான தேசிய கோரிக்கை மீது ஒடுக்கு முறையைக் கையாண்டனர். அத்துடன் மார்க்சியத்தின் சொற் களஞ்சியங்களில் இருந்த சில சொற்களை உள்வாங்கி, அதை கலவையாக்கி தம்மைத் தாம் அலங்கரித்தனர். இதனால் இந்த கலவை இனம் காண முடியாத ஒரு அரசியல் வழியாக எட்ட நிற்போரை மயக்கி நின்றது.

உருவான ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் தனது அரசியலாக, துப்பாக்கியை ஆணையில் வைத்தனர். ஆயுதமே அனைத்துமாகி, அதுவே ஒரு தமிழ் தேசிய மொழியாகி, ஒட்டுமொத்தத்தில் அரசியல் ஆணையாகியது. ஆயுதம் ஏந்தியவனின் சிந்தனை தேசியமாகவும், எதிரானது துரோகமாகவும் வரையறுக்கப்பட்டது. இப்படி உருவான அமைப்புகள், கொள்கை வழிப்பட்ட ஜனநாயக பூர்வமான ஸ்தாபன ஒழுங்கில் தன்னை கட்டமைக்கவில்லை. சில விதிவிலக்கு இருந்த போதும், அது ஒரு தலைப்படசமாக ஜனநாயக விரோதமான வகையில் அதிகார மையங்கள் உருவானது. உருவான இயக்கங்களை உருவாக்கியவர் தலைவராகவும் அல்லது ஆயுதத்தை சிறப்பாக பயன்படுத்தியவர் அல்லது மற்றவர்கள் மேல் அச்சத்தை ஏற்படுத்தும் கொலைகாரர்கள் தலைவர்களானர்கள். இது போன்ற ஏதோ ஒன்றை அடிப்படையாக கொண்டே, அமைப்புகளின் வளர்ச்சியும் அதன் ஒழுங்கமைப்பும் வரையறுக்கப்பட்டது.

இப்படி உருவான போது இதுவே அமைப்பின் ஜனநாயக வாழ்வை மறுத்து நின்றது. அவ் அமைப்பு உருவான நோக்கத்திலேயே முரண்பாடுகள் ஒட்டிப் பிறந்தது அதன் சொந்த விதியாகியது. ஒவ்வொரு விடயத்திலும் ஏற்பட்ட முரண்பாடுகளையும், துரோகமாக வரையறை செய்து அழித்தொழித்தனர், அழித்தொழிக்கின்றனர். உருவான அமைப்புகளின் கலப்புக் கோட்பாடுகள், மற்றொரு பக்கத்தில் அடிப்படையான போராட்ட வழி தொடர்பான முரண்பாட்டுக்கு அடித்தளமிட்டது. முரண்பாடுகள் இந்த அமைப்புகளின் இயங்கியல் விதியாக, அதை அழிப்பது தேசியத்தின் பண்பியல் கூறாகியது.

உண்மையில் எமது சமூக அமைப்பில் செறிந்துள்ள பாசீச பண்பியல் கூறுகள், ஆயுதம் ஏந்தியோரின் அரசியல் சித்தாந்தமாகியது. பாசீசம் இந்த தேச விடுதலை இயக்கமாக நீடிப்பதற்குரிய அடிப்படையாகவும் ஆதாரமாகவும் மாறியது. தனது சொந்த அமைப்பிலும், மக்களின் மேலும் கட்டமைக்கப்பட்ட பாசீசத்தைக் கைவிட்டால், போராட்டமே சிதைந்து விடுமளவுக்கு போராட்டம் பாசீசப் பண்பாகியது. அரசியல் ரீதியாக மக்களையும் சொந்த அணியையும் தேசிய விடுதலைப் போராட்டம் கட்டமைப்பதற்கு பதில், பாசீச பண்பியல் வழியாக தேசியம் கட்டி பாதுகாக்கப்படுகின்றது. இதைத் துல்லியமாக புலி சாhந்து ஆராய்வோம்.

www.tamilarangam.net



புலி ஒரு பாசீச இயக்கமாக, அதுவே ஒரு அரசியல் சக்தியாக இருப்பதை பலர் புரிந்து கொள்ள மறுக்கும் போது, தொடர்ச்சியான தவறுகள் இழைக்கப்படுகின்றது. புலிகளை வெறும் குட்டிபூர்சுவா வர்க்க இயக்கமாகவும், தேசிய பூர்சுவா வர்க்க நலனை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் கருதி, பாசீசத்தின் அடிப்படையை காணத் தவறுவதன் மூலம் சரியான அரசியல் வழி தொடர்ச்சியாக நிராகரிக்கப்படுகின்றது. இதன் மூலம் சித்தாந்த ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் பாசீசத்துக்கு துணைபோகின்றனர். உண்மையில் புலிகளின் பாசீசத்துக்கு எதிரான அணியை துல்லியமாக தனித் தனியாக ஆராய்ந்தால், பாசீசத்தை நிலை நாட்டுவதில் தோல்வி பெற்ற மற்றொரு பாசீச பண்பியலை அடிப்படையைக் கொண்ட உதிரி நபர்களும், குழுக்களும் காணப்படுகின்றனர். புலிப் பாசீசத்தை சரியாக அரசியல் ரீதியாக புரிந்து கொள்ள தவறியதன் விளைவு, எதிர் தரப்பையும் புரிந்து கொள்வதை நிராகரிப்பதில் இருந்து சம காலம் நகர்கின்றது. அரசியல் ரீதியான தவறான மதிப்பீடு, அரசியல் ரீதியான பாசீச கண்ணோட்டத்தையும் நட்பு சக்தியாக அனுசரிக்க கோரியது.

புலிகள் குட்டிபூர்சுவா வர்க்க நலன்களையும், தேசிய பூர்சுவா வர்க்க நலன்களையும் பிரநிதித்துவப்படுத்திய ஒரு தேசிய சக்திகளா? இதற்கு எந்த ஆதாரத்தையும் யாரும் என்றும் தரமுடியாது என்பதே உண்மை. இலங்கை அரசுடன் மோதுவதால் குட்டிபூர்சுவா வர்க்க நலனையும், தேசிய பூர்சுவா வர்க்க நலனையும் பிரநிதித்துவப் படுத்திவிடுவதில்லை. மார்க்சிய லெனினிய மாவோசிய சிந்தனை தெளிவாகவே ஜனநாயகப் புரட்சி நடக்காத நாடுகளில், பூர்சுவா புரட்சி நடக்க முடியாது என்பதை சோவியத் புரட்சிக்கு பின்னால் துல்லியமாக நிறுவியுள்ளது. இதை மார்க்சியத்தை ஏற்றுக் கொள்ளும் யாவரும் அங்கீகரிக்கின்றனர். ஆனால் நடைமுறை ரீதியான பிரச்சனையில் இதை சரியாக கையாள்வதில்லை. இதனால் கோட்பாட்டு ரீதியாக தவறான வாதங்கள் முன் தள்ளப்படுகின்றது. குட்டிபூர்சுவா வர்க்கம் தேசிய பூர்சுவா வர்க்க நலன்களை முன்வைத்து சுயேற்சையாக போராட முடியாது. இங்கு பிற்போக்கு தரகு நிலப்பிரபுத்துவ சார்பு நிலையை எடுத்து, ஏகாதிபத்திய மறு காலனியாகம் அல்லது பாட்டாளி வர்க்கம் சார்ந்து புதியஜனநாயக புரட்சியாக மட்டும் நடக்க முடியும். இங்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக பிற்போக்கு வர்க்கங்கள் சார்ந்து எழும் தேசியம் பாசீசத்தையும், ஒடுக்கப்பட்ட மக்கள் சார்ந்து நடக்கும் தேசியம் ஜனநாயகத்தையும் ஆதாரமாக கொள்கின்றது. இதற்கு வெளியில் தேசிய இயக்கங்களின் அரசியல் முதல் அதன் பண்பியல் கூறுகள் வரை எங்கும் விதிவிலக்கு இருப்பதில்லை.

இங்கு தேசியத்தின் உள்ளடக்கம் என்பது புதியஜனநாயகப் புரட்சி அல்லது ஏகாதிபத்தியம் சார்ந்த உலகமயமாதல் என்ற இரு அரசியல் வழிக்கு வெளியில், மாற்று வழி என்பது கிடையாது. பிரதான எதிரி தேசியத்தில் உயிருள்ளதாக நீடிக்கும் வரை, இந்த இரு எதிர் நிலையிலும் உள்ள முரண்பாட்டை எப்படி நாம் புரிந்து கொள்வது என்பது மிக முக்கியமானதாகும். இங்கு ஐக்கிய முன்னணி தத்துவத்தை பிரயோகிப்பதா? அல்லது எதிரியாக காண்பதா? என்பதே இதில் மிக முக்கியமான விடையம். இங்கு தான் பாசீசத்தின் அடிப்படைக் கூறுகளை புரிந்து கொள்வது அவசியமாகின்றது. புலிகள் ஒரு பாசீச இயக்கமா இல்லையா என்பதை புரிந்தது கொள்வதன் மூலம், குறிப்பான நிலைப்பாட்டை ஆராய்வோம். பாசீசம் பூர்சுவா புரட்சி நடந்த நாடுகளில் வெளிப்படும் போது அதற்குரிய தன்மை, பூர்சுவா புரட்சி நடக்காத நாடுகளில் இருந்து வேறுபடுகின்றது.

பூர்சுவா புரட்சி நடந்த நாடுகளில், பாசீசம் ஆட்சிக்கு வரமுன்பு சொந்த பூர்சுவா வர்க்கத்தை எதிர்ப்பதாக நாடகமாடுகின்றது. குட்டிபூர்சுவா வர்க்க நலன்களை வென்று தருவதாக வாக்குறுதி அளிக்கின்றது. பாசீச தத்துவமே பல்வேறு கதம்பக் கூறுகளை கொண்டே உருவாகின்றது. குட்டிபூர்சுவா மக்கள் திரளை கவருவதற்கு பாசீசம், கதம்பத் தத்துவத்தை ஆயுதமாக கொள்கின்றது. வர்க்கமற்ற சமுதாயத்தை படைக்கப் போவதாக பிரகடனம் செய்கின்றது. உழைக்கும் மக்களின் அன்றாட போராட்டத்தில் இருந்து தன்னை விலகி இருப்பதாக காட்டுவதில்லை. பாசீசம் அதிகாரத்துக்கு வரும் காலம் என்பது, மிக கூர்மையான வர்க்கப் போராட்டம் நடக்கும் போதே

www.tamilarangam.net



நிகழ்கின்றது. மூலதனத்தை தக்கவைத்து சுரண்டலை தீவிரப்படுத்தவும், வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கவும், உழைக்கும் மக்களின் நண்பனாக காட்டி ஆட்சியைக் கைப்பற்றுகின்றது. உண்மையில் மக்களின் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தை உள்வாங்கி, அதை பெரு மூலதனத்துக்கு சாதகமாக மாற்றி அமைக்கின்றது. ஒழுங்குமுறையற்ற இனவெறியை ஏற்படுத்தி, படுபிற்போக்கான ஆதிக்க வெறியை ஊட்டுகின்றது. யுத்த வெறியை மூலதனமாக்கி தன்னை தற்காத்துக் கொள்கின்றது. உழைக்கும் மக்களை மிக கொடுரமாக சுரண்டி, சொத்துரிமையை குவிப்பதை ஆணையில் வைக்கின்றது. ஆனால் இவை அனைத்தையும் ஒளிவு மறைவாக தன்னை மறைத்துக் கொண்டே, தன்னை ஒரு ஆளும் பாசீச வர்க்கமாக மாற்றுகின்றது.

முதலாளித்துவ (பூர்சுவா) ஜனநாயக புரட்சி நடக்காத நாடுகளில், பாசீசத்தின் வெளிப்பாடும் நோக்கமும் வேறுபடுகின்றது. இங்கு உருவாகும் பாசீசம் மிக பிற்போக்கான வகையில் ஏகாதிபத்தியத்துக்கும் உலகமயமாதலுக்கும் சேவை செய்வதை அடிப்படையாக கொண்டது. ஏகாதிபத்திய சுரண்டலால் நலிந்து போகும் சமுதாயத்தில் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்த பிரிவுகளில் ஏற்படும் முரண்பாட்டை ஒழித்துக்கட்டவும், கிடைக்கும் எச்சிலை முழுமையாக உயர்ந்த பட்சமாக்க சிறிய கும்பல் ஒன்று அனுபவிப்பதை பாசீசம் உறுதி செய்கின்றது. அதாவது ஏகாதிபத்திய சுரண்டலை எல்லையற்றதாக்குவதும், இதில் எச்சில் இலை பொறுக்கி வாழும் ஆளும் பாசீச கும்பலின் நலன்கள் உறுதி செய்வதையும் பாசீசம் ஆதாரமாக கொள்கின்றது. இங்கு பாசீசத்தை கட்டமைக்கும் போது, குட்டிபூர்சுவா வர்க்க நலன்களையும், பூர்சுவா நலன்களை பாதுகாக்க உள்ளதாக வாய்ப்பந்தல் போடுகின்றது. பாசீசத்தின் இயல்பாக நடைமுறை சமூகப் பண்பியல் கூறாக நீடிக்கும் இன மத சாதிய வெறியில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதை முன்வைத்து அதை பாசீச இராணுவக் கட்டமைப்பாக கட்டமைக்கின்றது. இராணுவ ஒடுக்குமுறைகளையும், யுத்தங்களையும், யுத்த தயாரிப்புகளையும் தொடாச்சியாக செய்கின்றது. ஏதாவது ஒரு முரண்பாட்டை வன்முறை சார்ந்த எல்லைக்குள், தொடர்ச்சியாக உயிர்வாழ வைக்கின்றது.

உண்மையில் பூர்சுவாப்புரட்சி நடந்த நாடுகளில் பாசீசம் தன்னை ஒரு சர்வதேச ஆக்கிரமிப்பாளனாக வெளிப்படுத்தி நிற்கும் போது, பூர்சுவா புரட்சி நடக்காத நாடுகளில் அதற்கு சேவை செய்வதை அடிப்படையாக கொள்கின்றது. இரண்டு பாசீசம் ஜனநாயக பண்பியல் கூறுகள் அனைத்தையும் ஈவிரக்கமின்றி அழிப்பதுடன், மாற்றுக் கட்சிகள் அனைத்தையும் அழிக்கின்றது. முழு மக்களையும் இராணுவ மயமாக்குகின்றது. தேசிய வளத்தை அழித்து, சுரண்டலை ஆழமாக்குகின்றது. பெருநிதி மூலதனத்தையும், பெரு மூலதனத்தையும் ஆதாரமாகவும் அத்திவாரமாகவும் கொள்கின்றது. இவை எப்படி புலிகளுக்கு பொருந்துகின்றது?

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஒரு ஆயுதப்போராட்டம் தேசியத்தின் பால் உருவான போது, அதன் அடிப்படையான பரிணாமமும் மக்களுக்கு எதிராகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மக்கள் இலங்கை இனவெறி சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இழிந்த வாழ்வின் மேல், தேசியத்தின் பெயரில் கிடைத்த ஒடுக்குமுறையும் இணைந்த போது மக்கள் எதுவுமற்ற செம்மறி மந்தை நிலைக்கு தாழ்ந்தனர். தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், இதை முன்னெடுப்போர் தொடர்பாக எதையும் மக்கள் வாய் திறந்து அபிப்பிராயம் கூறமுடியாது. வாய் உண்பதற்காக மட்டும் என்பதை, தேசிய விடுதலை இயக்கங்கள் உருவாக்கின. உண்பதற்கு கூட மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தினார்களா எனின் இல்லை. மாறாக இருந்த தேசிய பொருளாதாரத்தை தேசிய விடுதலை இயக்கங்கள் அழித்தன. சிங்கள இன தேசிய பாசீச வெறியர்கள் நடத்திய அழிப்பு ஒரு யுத்தம் சார்ந்ததாக இருந்த போது, தேசிய இயக்கங்கள் அதை ஒரு வாழ்வியல் மீது அழித்தனர்.

உண்மையில் பார்த்தால் மக்கள் வாழ்வியல் என்பது இரட்டைச் சுரண்டலுக்கு உள்ளாகி அதுவே கொடுமையாக மாற்றப்பட்டது. யுத்தத்தின் வளர்ச்சில் சில பிரதேசங்கள், புலிகளின் கட்டுப்பாட்டு

www.tamilarangam.net



பிரதேசமாக மாறியது. அப்போது அங்கு வாழ்ந்த மக்கள், விதிவிலக்குகள் தவிர புலிப் பாசீசத்தை மட்டுமே எதிர்கொண்டனர். மக்கள் வாய் பொத்தி அடிமைகளாக வாழ்ந்தனர், வாழ்கின்றனர். இதை தெளிவாக புரிந்து கொள்ள புலிப் பாசீச கட்டுப்பாட்டில் இருந்து, சிங்களப் பாசிட்டுகளின் கைக்கு அதிகாரம் மாறிய போது, மக்கள் மூச்சு விட்டது உலகெங்கும் பிரதிபலித்தது. அமைதி, பேச்சு வார்த்தை என்ற போர்வையில் சிங்கள இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் புலிகள் நடமாடிய போது, புலிகளின் ஆட்சியில் எப்படி இருக்கும் என்பதை ஈவிரக்கமற்ற வகையில் எப்போதும் பிரதிபலிக்கின்றது. மிரட்டல் ஒரு மொழியாக, படுகொலையை மூலதனமாக கொண்டு பணம் வசூலிப்பது, ஆட்களைக் கடத்தி சென்று தமது பாசீச இயக்கத்தில் பலாத்காரமாக இணைப்பது, சுயாதீனமான மக்கள் அமைப்புகளை கைப்பற்றுவது, போராட்டத்துக்கு மக்களை மிரட்டி அழைத்து வருவது, மக்களை அழைத்து வர சமூகத் தொடர்பாளர்களை பல வகையில் நிர்ப்பந்திப்பது, சலுகையுடன் கூடிய கூலிக் கும்பலை உருவாக்கி அவர்கள் மூலம் மக்களைத் திரட்டுவது, லும்பன் குழுக்களை கலாச்சாரத்தின் காவலராக்குவது என, எண்ணற்ற மனித விரோத செயல் அனைத்தும், அரங்கேற்றுவதையே எதார்த்தம் காட்டுகின்றது. இந்த நிலையில் தான் அவர்களின் கட்டுப்பாட்டு பிரதேச மக்கள் அடிமையாக வாழ்வதை தொடர்ச்சியாக நிறுவுகின்றது. சொந்தக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வெளியே வருவதற்கு விதிக்கும் பாஸ் தடை, பணயமாக குடும்ப உறுப்பினர் நிறுத்தப்படுதல், சொத்துகளை எழுதி வாங்குதல், வறுமையை திட்டமிட்டே சமூக மயமாக்கல் போன்ற எண்ணற்ற செயல்களால் தான், புலிகள் மக்களை தொடர்ந்தும் தம்முடன் வாழ வைக்கின்றனர்.

அசையா சொத்துகளை புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலும், புலிகளின் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலும் கட்டாயப்படுத்தி சிறிய தொகைக்கும் அல்லது இலவசமாக பினாமிகளின் பெயரில் பெருமளவில் வாங்கப்படுகின்றது. உரிமையாளர்கள் அற்ற நிலங்கள் வீடுகள் தனிமனித சொத்துகள், சட்ட விரோதமாக புலிகளில் உள்ள தனி நபர்களால் அபகரிக்கப்படுகின்றது. இங்கு இவை எதுவும் தேசிய சொத்தாக மாற்றப்படவில்லை. புலித் தலைவர்கள் தமது பெயரிலும், பினாமிகள் பெயரிலும் சொத்துகளை அபகரிக்கப்பட்டு குவிக்கப்படுகின்றது. ஏன் இவை தேசிய சொத்தாக, சமூகச் சொத்தாக மாற்றப்படவில்லை.

ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக துகிலுரிந்து நிர்வாணமாகும் நாட்கள் கனிந்து வருவதை இவை காட்டுகின்றது. பெரும் மூலதனத்துடன் ஏகாதிபத்திய கூட்டாளிகளாக புலிகள் தம்மைத் தாம் மிதப்பாக எடுத்துக் காட்டும் நாட்கள் நெருங்கி வருகின்றது. அதை நோக்கி சொத்துகள் தேசியத்தின் பெயரில் அபகரிக்கப்படுகின்றது. ஏகாதிபத்திய வெள்ளையின மக்களின் ரசனைக்கும் ருசிக்கும் ஏற்ப, சுற்றுலா மையங்கள் முதல் பண்பாட்டு ரீதியாக நக்கிவாழவும் தமிழ் மக்களை தலைகீழாக்க புலிப் பாசிட்டுக்கள் தயாராகி வருகின்றனர்.

**தமிழ் மக்களின் கருத்து எழுத்து பேச்சு சுதந்திரத்தை மறுத்து உருவான குறுந்தேசிய வர்க்க பாசீசம்**

இந்த நிலைமை ஏற்படுவதற்கு இலங்கை இனவாத பாசீச அரசை மட்டும் நாம் நேரடியாக குற்றம் சாட்டமுடியாது. மாறாக போராடும் அமைப்புகளின் மக்கள் விரோதத் தன்மையே இதன் பிரதான அடிப்படையாகவும், மூல வேராகவும் உள்ளது. இன ஒடுக்குமுறையை சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்கள் மீது திணித்து அடக்கிய போது, இதற்கு எதிரான போராட்டம் இயல்பாகவும் இயற்கையாகவும் ஒரு உரிமையாகவும் எழுந்தது. இந்த போராட்டம் பாராளுமன்ற அரசியல் வழிகளில் இருந்து நேரடியாக, அதன் பின் இருந்த இளைஞர்களின் கைகளில் அரசியலற்ற ஆயுதப் போராட்டமாக மாறியது. இந்த வகையில் இப் போராட்டம் இளைஞர்களின் போராட்டமாக வெளிப்பட்டது. அத்துடன் தமிழ் பாராளுமன்ற தரகு நிலப்பிரபுத்துவ அரசியல் பூர்சுவா அடிப்படை வாதத்துடன் இணைந்து, இதுவே இயக்கங்களின் பொது அரசியல் வழியானது. இந்த பூர்சுவா இளைஞர் இயக்கங்கள் ஆயுதத்தை எடுத்த அதேநேரம், நிலப்பிரபுத்துவ தரகு முதலாளித்துவ பாசீச அடிப்படை வாதத்தில் நின்று, ஜனநாயக மறுப்பை ஆதாரமாக கொண்டே தங்களை நிலை நிறுத்தத்

www.tamilarangam.net



தொடங்கினர். இந்த ஜனநாயக மறுப்பு சொந்த இயக்கத்துக்குள்ளும், மக்களுக்கு எதிராகவும் ஆரம்ப முதலே கொண்டிருந்தது. இதை மூடிமறைத்தபடி போராடும் சுதந்திர உரிமைக்கு எதிராகவும், மற்றைய இன மக்களுக்கு எதிராகவுமே தனது ஜனநாயக விரோத மற்றும் குறுந்தேசிய இனவாதத்தை அரசியல் மயமாக்கியது. தமிழ் மக்களின் போராட்டம் சார்ந்து எழுந்த 30 க்கு மேற்பட்ட இயக்கங்களில், ஒரு இரு இயக்கம் தவிர அனைத்தும் குறுந்தேசிய இனவாதத்தை அடிப்படையாக கொண்டு, ஜனநாயக மறுப்பை ஆதாரமாக கொண்டே உருவாகின. சொந்த இயக்கத்துக்குள் கருத்துச் சுதந்திரத்தை மறுத்து, சர்வாதிகார பாசீச அமைப்புகளாக உருவாகிய இயக்கங்கள், மாற்று இயக்கத்தின் கருத்துச் சுதந்திரத்தை மறுத்து அழித்தொழிப்பதன் மூலம் தம்மைத் தாம் நிலை நிறுத்த முனைந்தன. இந்த இயக்கங்கள் மக்களை அற்பமாக கருதியதுடன், மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் சிந்தனைச் சுதந்திரம் அனைத்தையும் அடக்கியொடுக்கியதுடன், அதை துரோகமானதாகவும் பிரகடனப்படுத்தின. மக்கள் சிந்திப்பது ஆபத்தானது என்பது அவர்களின் அரசியலாகியது. மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தையும், மக்களின் ஜனநாயக உரிமையாக கூட இயக்கங்கள் அங்கீகரிக்கவில்லை. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை கோரி வீதியில் இறங்கி இயக்கத்துக்கு எதிராக போராடிய போது, புலிகள் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட துண்டு பிரசுரத்தில், இதை தாம் ஏற்றுக் கொண்டால் "புலிகளை அரசியல் அநாதையாக்கிவிடும்" என்ற கூறி மறுத்ததுடன், அதற்கு எதிராக வன்முறையையும் படுகொலைகளையும் ஈவிரக்கமின்றி நடத்தினர். உத்தியோகபூர்வமாக "மேதகு" தலைவர் பிரபாகரன் பெயரில் வெளியிட்ட துண்டுபிரசுரத்தில் "இந்த ஐந்து கோரிக்கைகள் உட்பட விஜிதரனுடன் சம்பந்தப்படாத, விடுதலைப் புலிகளை அரசியல் அனாதைகளாக்கக் கூடிய@ மேலும் இரு கோரிக்கைகள் வெகுஜன அமைப்பின் மூலம் எம்முன் கொண்டு வரப்பட்டு பேச்சுவார்த்தை தொடரமுடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது." என்று புலிகள் அறிவித்து நிராகரித்த இரு கோரிக்கையும் என்ன எனப் பார்ப்போம்.

.மக்களுக்கு எழுத்து, பேச்சு, கருத்து, பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும்.

. .மக்களுக்கு விரும்பிய அரசியல் ஸ்தாபனங்களில் இருக்கவோ அரசியல் நடத்தவோ சுதந்திரம் வேண்டும்.

இந்தக் கோரிக்கை "புலிகளை அரசியல் அநாதையாக்கிவிடும்" என்று கூறிய போது, பாசீசம் திராட்டம் போடுவதையே காணமுடியும். எந்த வகையிலும் இதை மக்களுக்கு நிராகரிக்கும் உரிமை புலிகளுக்கு கிடையாது. மக்கள் விரோதியான புலிகள் இதை மக்களுக்கு மறுத்தார்கள். இந்த உரிமை மக்களின் அடிப்படை உரிமையாகும். இதை நிராகரிக்கும் புலிகளின் வக்கிரமான மக்கள் விரோத போக்கு, வரலாறு காணாத வகையில் அனைத்து துறையிலும் விசுவரூபம் எடுத்துள்ளது. இன்று வரை இது தான் புலிகளின் அரசியலாக, ஒழுக்கமாக, படுகொலையாக நடிக்கின்றது. சர்வாதிகார பாசீச மக்கள் விரோத வன்முறை அரசியலே, எப்போதும் மக்களின் அடிப்படை உரிமையை நிராகரிக்கின்றன. புலிகள் அதன் ஒட்டு மொத்த மக்கள் விரோதிகளாக இருப்பதையே, அவர்களின் துண்டுப்பிரசுரம் அம்பலப்படுத்துகின்றது. மக்கள் மக்கள் என்று வாய் கிழிய பிதற்றும் புலிகளின் உண்மை முகம், மக்களின் அடிப்படை மனித உரிமையை மறுப்பதை ஆதாரமாக கொண்டே எழுகின்றது. இவற்றை அவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் தெளிவாக்குகின்றன. மக்களின் உரிமைகள் புலிகளை அரசியல் அநாதையாக்கிவிடக் கூடியது என்றால், மக்கள் விரோத கொடூரத்தை நாம் அவர்களின் சொந்த கூற்றின் ஊடாகவே புரிந்து கொள்ளமுடியும். அதி புத்திசாலியாக தனிமனித வழிபாட்டின் மூலம் நிறுவ முனையும் புலிகளின் தேசியத் தலைவர் "மேதகு" பிரபாகரனினதும், புலிகளினதும் "தணியாத தாகமான தமிழீழக் கோரிக்கை" தமிழ் மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திர மறுப்பில், அதன் கல்லறையின் மீதே கோரப்படுகின்றது. தமிழீழம் நிச்சயமாக தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுத் தரப்போவதில்லை. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை, புலிகளை அரசியல் அநாதையாக்கி விடுமல்லவா. அதனால் புலிகள் தமது பாசீச தனிமனித சர்வாதிகார அதிகாரத்தில் மக்களை துப்பாக்கி முனையில்

www.tamilarangam.net



மந்தைகளாக, வாய்பொத்தி கைகட்டி தோப்புக்கரணம் போடவைத்துள்ளனர். தமிழ் மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரம் மறுக்கப்பட்ட சர்வாதிகார பாசீச கட்டமைப்பில் இயக்க மோதலும், உட்கட்சி படுகொலைகளும் விசுவரூபம் எடுத்தது. இதன் விளைவாக இயக்கப் படுகொலைகள் ஒரு யுத்தமாகவே புலிகளால் நடத்தப்பட்டது. உயிருடன் தீ வைத்து கொழுத்துவது முதல் ஈவிரக்கமற்ற சித்திரவதை படுகொலைகள் வரை ரசித்து செய்யவும் பின்நிற்கவில்லை. கைது செய்யப்பட்டவர்களை ஈவிரக்கமின்றி சித்திரவதை செய்து கொன்று போடுவதே வீரத்துக்குரிய நடவடிக்கையாக, புலிகளின் பாசீச வக்கிரம் வெளிப்பட்டது. ஜனநாயக மறுப்பையும் படுகொலை அரசியலையும் நியாயப்படுத்தி தொடருமளவுக்கு, புலிகளின் தனிமனித தனிச் சர்வாதிகாரம் மக்கள் விரோத அரசியலில், தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய போராட்டத்தின் பெயரில் அரங்கேறியது, அரங்கேறுகின்றது. தம்முடன் முரண்பட்ட அனைத்தையும், சொந்த இயக்கத்துக்குள்ளும் விதிவிலக்கின்றி துரோகமாக காட்டி அவர்களை இல்லாது ஒழிப்பதன் மூலம், தம்மையும் தமது பாசீச சர்வாதிகார அரசியலையும் நிலைநாட்டுகின்றனர். இங்கு எந்த இடத்திலும் அரசியல் ரீதியாக முன்னேறிய வெற்றியில், தம்மை நிலைநாட்டிவிடவில்லை. சதிகள் மற்றும் படுகொலைகளின் மூலமே புலிகள், அரசியல் அநாதையாகாது தம்மைத் தாம் தக்க வைக்கின்றனர்.

மறுதளத்தில் இந்த இயக்க அழித்தொழிப்பு பாசீச நடைமுறையில் தோற்றுப் போனவர்கள், நேரடியாக அன்னிய கைக்கூலியாக மாறினர். முன்னைய மறைமுக கைக் கூலிதனத்தை களைந்து, நேரடியாக மற்றைய நாடுகளின் சுரண்டல் விஸ்தரிப்புவாத கூலிப்பட்டாளமாக மாறினர். பின்னால் இலங்கை சிங்கள இனவெறி பாசீச அரசின் தயவில் நேரடிக் கைக்கூலியாக ஆயுதம் ஏந்திய அமைப்புகளாகவும், பாராளுமன்ற கட்சிகளாகவும் தம்மை தாம் நிலை நாட்டுகின்றனர்.

இந்த நிலைக்கு இட்டுச் சென்ற வரலாற்றில், புலிகளின் ஜனநாயக மறுப்பு தனிச் மனித சர்வாதிகாரமும், மக்கள் விரோத பாசீசத் தன்மை ஒரு அடிப்படை கூறாக இருந்தபோதும், இயக்கங்களின் முந்திய மக்கள் விரோத ஜனநாயக மறுப்புடன் கூடிய கைக்கூலித்தன அரசியலே இதன் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருந்தது. மக்களை வெறுக்கும் சமூக கண்ணோட்டம் இதன் அத்திரவாரமாக உள்ளது. மக்களின் போராட்டம் என்பதை மறுத்து, இளைஞர்களின் போராட்டமாகி, அதுவே அன்னிய உதவியாகி, ஆயுதங்களே அனைத்தையும் தீர்மானிக்கும் என்ற நடைமுறை, மக்களை வெறுக்கும் அளவுக்கு போராட்டம் சீரழித்தது. இது அனைத்து இயக்கத்தினதும் அடிப்படை கொள்கையாகும். எதிர் நிலையில் மற்றைய இயக்கங்களால் இங்கு புலிகள் அழிக்கப்பட்டிருந்தாலும், இதே கதிதான் புலிக்கும் நிகழ்ந்திருக்கும். புலிகளின் ஈவிரக்கமற்ற அழித்தொழிப்பு, துரோகத்துக்கு எதிராக சொந்த காலில் வாழ வழியற்ற இளைஞர்களையும், தவிர்க்க முடியாமல் துரோகத்துக்கு துணை நிற்கச் செய்தது. இது துரோக இயக்கத்தை ஆயுதபாணியாக்கியது. ஆயிரமாயிரம் இயக்க உறுப்பினர்கள் இயக்கத்தை விட்டு தமது சொந்த குடும்பத்துடன் சாதாரணமாக வாழ முடியாத அவலமும், மறுதளத்தில் நாட்டை விட்டு வெளியேற முடியாத பொருளாதார பலவீனமும், புலிகளின் படுகொலையில் இருந்து தப்பிப் பிழைக்க, துரோக இயக்கத்தின் பின்னால் தவிர்க்க முடியாமல் ஆயுதமேந்தி நிற்க நிர்ப்பந்தித்தது. இந்த துரோக இயக்கத்தின் தொடர்ச்சியான ஆள்பலத்துடன் கூடிய அடிப்படையும் ஆதாரமும், ஈவிரக்கமின்றிய புலிகளின் படு கொலையுடன் கூடிய அழித் தொழிக்கும் பாசீச அரசியலே துணை நிற்கின்றது. அதாவது இன்று அரசுடன் துரோக கைக்கூலி இயக்கங்கள் நிலைத்து நீடித்து நிற்பதற்கான அடிப்படையையும், ஆதாரத்தையும், ஆள் பலத்தையும்@ புலிகளின் பாசீச கண்ணோட்டத்துடன் கூடிய அழித்தொழிப்பு பாசீச அரசியலில் இருந்தே உற்பத்தியாகின்றது.

இந்த துரோக இயக்கத்தை எதிர்த்து பலர் சொந்த காலில் நிற்க முனைந்தனர். குடும்பத்தை சார்ந்தும், சொந்தப் பிழைப்பைச் சார்ந்தும், துரோகத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தும், ஒரு பகுதி இளைஞர்கள் தம்மை நிலைநிறுத்தினர். ஆனால் புலிகள் ஈவிரக்கமின்றி தமது பாசீச இரத்த வேட்கைக்கு இவர்களை பலியாக்கினர். எம் மண்ணில் புலிகளின் படுகொலை பாசீச அரசியலுக்கு அண்ணளவாக 5000க்கும் அதிகமான தமிழ் போராளிகள் பலியாகினர். தொடர்ந்தும்

www.tamilarangam.net



பலியாகி வருகின்றனர். இந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்த காலத்திலும், அதன் பின்பும் இது உச்சத்தில் இருந்தது. நாள் ஒன்றுக்கு 3, 5 படுகொலைகள் என்று, வருடம் 1000 முதல் 1500 மேற்பட்டோரை வடக்கு கிழக்கில் வீதிப் படுகொலைகளை புலிகள் செய்தனர். அன்றைய நாளாந்த பத்திரிகைச் செய்திகளில் இருந்து இதைத் தொகுத்தலே, இதை மீளவும் உறுதி செய்ய முடிகின்றது. துரோக இயக்கங்கள் புலிகளை கொன்ற போது, புலிகள் அதை அம்பலம் செய்ததை வைத்து இவற்றை வேறு பிரித்து, இதை தொகுக்க முடிகின்றது. இந்திய ஆக்கிரமிப்பாளன் நாட்டை விட்டு வெளியேறிய பின்பு, சில ஆயிரம் பேரைக் கைது செய்த புலிகள், அவர்களை வதைமுகாமில் வைத்தே படுகொலை செய்தனர். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எம்மண்ணில் இருந்த காலத்தில், என்.எல்.எப்.ரியின் வடமராச்சி பகுதியைச் சேர்ந்த சகல தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களையும் தெரிவு செய்து, ஒரு கிழமைக்குள்ளாகவே சாதிரீதியாக வீதிவீதியாக புலிகள் படுகொலை செய்தனர். அதற்கு முன்பாக வடமராட்சி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த புலிகளின் பொறுப்பாளர் படுகொலை செய்யப்பட்ட பின்பே, இந்த சாதிய வெறி அரங்கேற்றப்பட்டது. இது கிழக்கில் புலிகள் இயக்கத்தில் ஆயுதம் ஏந்தியிருந்த முஸ்லீம்களை உட்படுகொலைகள் மூலம் கொன்ற பின்பே, முஸ்லீம் மக்கள் மேல் நடத்திய படுகொலையை போன்றது. தெல்லிப்பளை பகுதியில் புலி உறுப்பினர் ஒருவன் பாரிசில் கொல்லப்பட்ட சபாலிங்கத்தின் மனைவியின் தம்பி) புலிகள் சார்பாக தானாக முடிவெடுத்து, 16 அப்பாவிகளை துரோகியாக அறிவித்து தனிப்படவே சுட்டு கொன்றான். இந்திய இராணுவம் அவனை சுட்டுக் கொல்லப்படும் வரை, அவன் தனது சொந்த மறைவிடத்தை விட்டு வெளியில் வருவதே, படுகொலை செய்ய என்பது அனைவரும் அறிந்ததே.

இந்த மாதிரிப் படுகொலைகள் வரலாறு காணாத மனித துயரத்தை ஏற்படுத்தியது. இன்று எம்மண்ணில் புலிகள் படுகொலை மற்றும் சித்திரவதையால் ஏற்பட்ட சமூக ஊனம், மிருகத்தனமாக அடக்கப்பட்டு அடங்கிய மன அழுத்ததுக்குள் மக்கள் ஆழமாக சிறைவைக்கப்பட்டுள்ளனர். மாற்றுக் கருத்துடன் கூடிய சிந்தனை சுதந்திரம் மறுக்கப்பட்டு நடத்தப்பட்ட படுகொலையின் தொடர்ச்சியான வரலாறு என்பது, சமூகம் தொடர்ச்சியான வரலாற்று செயற்பாட்டை இழந்து சிதைவதை ஒரு பண்பாக்கியது. இதனால் மக்கள் செயற்பாடற்ற செம்மறி மந்தைகளாக, புலிகள் சொல்வதை செய்ய வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால் புலிகளின் பாசீசக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து மக்கள் தப்பியோட விரும்பினர், தப்பியோடினர், தப்பியோடுகின்றனர். சொந்த மண்ணை விட்டு தப்பியோடியவர்களின் எண்ணிக்கை, தமிழ் மக்களின் சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோராவர். இந்த தப்பியோட்டம் முடிவின்றி தொடர்ந்து நிகழ்கின்றது. மக்கள் வெளியேறுவதை பலாத்காரமாக தடுத்து நிறுத்தும் வகையில் புலிகளின் அனுமதியை பெறுவது அவசியமாக்கியதன் மூலம், தமது பாசீச அதிகாரத்தின் கீழ் மக்களை சிறை கைதிகள் ஆக்கியுள்ளனர். அதேநேரம் புலிகள் கொழும்பில் நடத்தும் தொடர்ச்சியான தற்கொலை தாக்குதலை தடுக்கும் வகையிலும், அரசு வடக்கு கிழக்கில் இருந்து வெளியேறி வருவோரை தடுப்பதாலுமே, இன்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இயற்கைக்கு புறம்பான வகையில் அரசு மற்றும் புலிகள் மக்கள் வெளியேறுவதை கட்டுப்படுத்துவது நிறுத்தப்படின், வடக்கு கிழக்கில் மக்கள் வாழ மாட்டார்கள். புலிகள் போராடும் பிரதேசத்தில் மக்களையே காணமுடியாத ஒரு சூனியப் பிரதேசத்துக்காக போராட வேண்டிய அளவுக்கு, புலிகளின் மக்கள் விரோத அரசியல் வக்கிரம் பிடித்த பாசீசமாக பரிணமித்துள்ளது.

மக்கள் மீது வன்முறையை அடிப்படையாக கொண்ட புலிகளின் அரசியல், மக்கள் சார்ந்த சமூக கூட்டுகளைக் கூட சிதைத்துள்ளது. சமூகத்தின் அனைத்து செயற்பாட்டையும் புலிகள் சார்ந்து புலி மயமாக்கப்பட்ட நிலையில், மக்களின் துயரங்கள் வரைமுறையின்றி பெருகிச் செல்லுகின்றன. இங்கு இந்த அடிப்படையை வைத்தே புதிய படுபிற்போக்கான மதவாத அமைப்புகளும், தன்னார்வக் குழுக்களும் தம்மை விரிவாக்குவதற்கு, புலிகள் அரசியல் ரீதியாக அனுமதிக்கின்றனர். இவ்விரு போக்கினரும் போராட்டத்துக்கு எதிராக, ஏகாதிபத்திய உலகமயமாதல் நோக்கத்தை பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக செயல்படுகின்றனர். தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை

www.tamilarangam.net



கோருகின்றவர்களையும், தேசிய பொருளாதாரத்தை கட்டமைக்க கோருபவர்களையும், ஏழை மக்களின் துயரத்தை போக்க தீர்வை கோருபவர்களையும் அழித்தொழிப்பதன் மூலம், படுகொலை செய்வதன் மூலம் புலிகள் பதிலளிக்கின்றனர். இதன் மூலம் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும், நியாயமான இயற்கையான மக்களின் போராட்டத்தையும் புலிகள் மறுத்து, மக்கள் விரோத கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்டு தமது பாசீச அதிகாரத்தை நிறுவியுள்ளனர். ஆயுதம் மூலம் அனைத்தையும் கையாளும் புலிகளின் பாசீச ஆட்சியில், சமூக இயக்கம் என்பது நினைத்துப் பார்க்கமுடியாது. இது மக்களின் அவலங்களை எல்லையற்ற வகையில் ஆழமாக விரிவாக்குகின்றது.

**சுயநிர்ணயம் என்பது உரிமையைக் கோருவதாகும்**

பொருட்களை மனிதனின் உழைப்பே உருவாக்குகின்றது. இது இயற்கை மீது நிகழ்கின்றது. இப்படி உழைத்து உருவாக்கிய பொருட்கள் மீது, மனிதன் ஆளுமை செலுத்த தவறிய உலகில் நாம் வாழ்கின்றோம். மாறாக பொருட்கள் மனிதன் மேல் ஆளுமை செலுத்துகின்றது. தன் கையால் உருவாக்கிய பொருட்களின் அடிமையாகிய பரிதாபம், மனித சமுதாயத்தை மீள முடியாத அடிமைத்தனத்தில் தள்ளியுள்ளது. இது போல் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமைப் போராட்டத்தை கோரியவர்கள், போராடுவதற்காக ஆயுதத்தை ஏந்தினர். ஆனால் ஆயுதத்தை ஏந்தியவர்கள் ஆயுதம் மேல் ஆளுமை செலுத்தத் தவறி, போராட்டத்தை ஆயுதத்தின் அடிமையாக்கியதன் மூலம், போராட்டம் மீள முடியாது ஆயுதத்தின் அடிமையாக்கினர். இதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை மீள முடியாத அடிமைத்தனத்தில் தள்ளியுள்ளனர். ஆயுதத்தின் முன் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டு நலமடிக்கப்பட்ட நிலையில், ஆயுதத்தை வழிபடவும் அதன் அடிமையாக இருப்பதுமே போராட்டமாக மாறிவிட்ட புலிகளின் பாசீச சமுதாயத்தில் நாம் வாழ்கின்றோம்.

புலிகளின் மக்கள் விரோத பாசீசம், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வென்று தருவதாக கூறியபடியே, தனது தலையில் வைத்து கூத்தாடுகின்றது. "மக்கள்" "மக்கள்" என்று சொல்லுக்கு பத்துதரம் காவடி தூக்கி ஆடுபவர்கள், மக்கள் என்ற சொல்லுக்கு அர்த்தமே தெரியாத பாசிட்டுகள், மக்களையிட்டு கேவலமான பார்வை கொண்டே செயல்படுகின்றனர். மக்களிடம் இருந்து அன்னியமாகி அவர்களுடன் இணைந்து எந்த உழைப்பிலும் ஈடுபடாத, ஆயுதமேந்திய லும்பன் வாழ்வை அடிப்படையாக கொண்ட புலிகளின் மாபியாவுக்குரிய கட்டமைப்பு, மக்களின் வாழ்வுடன் எந்தவிதத்திலும் இணைந்து செயற்படுவதில்லை. உலகில் எங்கும் காண முடியாத அளவுக்கு மக்களின் உழைப்பின் மீது கொடூரமான வரி விதித்தும், மிரட்டி பணம் பறித்தும், மக்கள் சொத்தை கொள்ளையிட்டும், மக்களை கொடூரமாக சுரண்டியும், வலுக்கட்டாயமாக மக்களின் சொத்தை பறித்தும் தம்மை நிர்வகிக்கும் புலிகளின் லும்பன் கட்டமைப்புடன் கூடிய சொகுசு வாழ்க்கை முறை, மக்களை எப்போதும் எதிரியாக காண்கின்றது. தமது லும்பன் சுகபோக வாழ்க்கை கேள்விக்குள்ளாவதை, புலிகளை சார்ந்து பிழைத்துக் கொள்ளும் யாரும் அனுமதிப்பதில்லை. புலிகளிடம் எதிர்த்து எந்த தமிழ் மக்களும் கேள்வி கேட்டு உயிருடன் வாழ்ந்ததில்லை அல்லது சித்திரவதையை சந்திக்காது இந்தப் போராட்டத்தில் வாழ்ந்துவிடவில்லை. புலிகளின் பின்னால் ஒட்டுண்ணிகள் போல பிழைத்துக் கொள்ளும் ஒரு கூட்டமும், சொந்த புகழ் சார்ந்து பொழுது போக்கும் ஒரு நக்கிபிழைக்கும் கூட்டமும், இந்த லும்பன் அரசியல் வாழ்வின் பின்பு தமிழ்மக்களை எதிரியாக கருதி அவர்களை ஒட்டச் சுரண்டுகின்றனர்.

கூலிக்கு கரைவலை இழுக்கவோ, மீன் பிடிக்கவோ, மண்வெட்டி பிடித்து நிலத்தை பண்படுத்தவோ தெரியாத தலைமையைக் கொண்டதே புலிகள் இயக்கம். இதற்கு தன்னை தயார்படுத்த மறுக்கும் தலைமை, இதையே வாழ்க்கையாக கொண்ட மக்களை இழிவாக பார்ப்பது இயற்கையாகும். போராட்டத்தைச் சொல்லி ஒரு பகுதி இளைஞர்களை கடுமையாக உழைக்க கோரும் புலிகள், அந்த உழைப்பை மூலதனத்துக்கு வெளியில் மதிப்பதில்லை. இங்கு சுரண்டுவது மையமான நோக்கமாக

www.tamilarangam.net



தறிக்கோளாக கொண்டே உழைப்பை இயக்கத்துக்குள் பயன்படுத்துகின்றது. எமது மக்களின் உழைப்பை மதிக்காது, அவர்களின் நலனை சூறையாடும் பாசீசப் புலிகள், மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரம் கொடுப்பது, லும்பன் சொகுசு வாழ்வுக்கு சாபக் கேடாக அமைந்துவிடும் என்பதால், மக்களை அடிமையாக கேவலமாக நடத்துகின்றனர். இதை அவர்களின் அனைத்து நடத்தைகளுடன் கூடிய நடவடிக்கைகள் முதல் அவர்களுக்கே உரிய லும்பன் மொழி என அனைத்திலும் துல்லியமாக இதை இனம் காணமுடியும். தமிழ் மக்களின் போராட்டம் என்பது, புலிகளின் பாசீச உள்ளடகத்தில் இருந்து முற்றிலும் வேறானது. தமிழ் மக்களின் சுயநிர்ணயம் என்பது தமிழ் மக்கள் மீதான அனைத்து அடக்குமுறையையும் களைவதாகும். இதில் தமிழ் மக்களுக்குள் தனிச் சலுகைகளை வழங்குவதில்லை. வெறுமனே சிங்கள அரசை மட்டும் எதிர்த்தல்ல. தமிழ் துரோகிகளையும், தமிழ் அடக்கு முறையாளர்களையும் எதிர்த்தே சுயநிர்ணயத்தை தமிழ் மக்கள் கோருகின்றனர்.

தமிழ் மக்கள் தமது சுயநிர்ணயம் என்பதை சொந்த தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட போராட்டத்திலேயே வரையறுக்கின்றனர். இந்த தேசிய பொருளாதாரம் அன்னிய பொருளாதாரம் ஊடுருவுவதை அனுமதிப்பதில்லை. அன்னிய பொருளாதாரம் தேசிய பொருளாதாரத்தையும் சிதைப்பதை அனுமதிப்பதில்லை. இந்த தேசிய பொருளாதாரம் சுயநிர்ணயத்தை அடைய தமிழ் மக்களின் அனைத்து ஏற்றத் தாழ்வையும் எதிர்க்கின்றது. இது சாதியத்தை எதிர்க்கின்றது இது ஆணாதிக்கத்தை எதிர்க்கின்றது. பிரதேச வாதத்தை எதிர்க்கின்றது. சிறுபான்மை தேசிய இனங்களை அரவணைக்கின்றது. பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு கரம் கொடுக்கின்றது. இது தமிழ் மக்கள் சுரண்டப்படுவதை எதிர்க்கின்றது. இது சொந்த மொழி வளத்தை பாதுகாக்கின்றது. மற்றைய இன மக்களுடன் ஐக்கியத்தை ஒன்றிணைவை முன்மொழிகின்றது.

இந்த தேசிய சுயநிர்ணயமே தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் உள்ளடக்கமும் அடிப்படையுமாகும். எமது இந்த தேசிய போராட்டத்தை படுகொலைகள் மூலம் துப்பாக்கி முனையில் தமதாக்கிய புலிகள், இந்த தேசிய சுயநிர்ணயத்தின் உள்ளடக்கத்தை எதிர்த்து தனது பாசீசத்தை நிறுவுகின்றது. தமிழ் மக்களின் போராட்டத்தை பாசீச படுகொலைகள் மூலம் குத்தகைக்கு எடுத்தவர்கள், தமிழ் மக்களின் அடிப்படையான கோரிக்கைகளை எதிர்த்தே தமது அதிகாரத்தை நிலைநாட்டுகின்றனர். தமிழ் மக்கள் சுரண்டப்படுவதை அங்கீகரிப்பதுடன், அதற்கு படுகொலைகள் மூலம் பாதுகாப்பு கொடுக்கின்றனர். சாதிய ஏற்றத் தாழ்வை ஏற்றுக் கொண்டு, அதை அப்படியே பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமாக எழும்போது குண்டுகளை பரிசளிக்கின்றனர். ஆண்களின் ஆணாதிக்கத்தை கம்பளம் விரித்து படுக்கவிட்டு பாதுகாப்பதிலும், இருக்கின்ற ஆணாதிக்க குடும்ப ஒழுங்கு சிதைவதை பண்பாட்டு சிதைவாக காட்டி பெண்களுக்கு ஜனநாயக மறுப்பை பரிசளிக்கின்றனர். மற்றைய இன மக்களை எதிரியாக காட்டி, அவர்களை ஈவிரக்கமின்றி கொன்று வெறியாட்டம் போடுகின்றனர். இதன் மூலம் தேசிய வெறியை ஊட்டி வளர்த்து, இனவாதத்தை தமது பாசீசத்துக்கு வலியாக்குகின்றனர்.

சிங்கள இனவெறி பாசீச அரசு தமிழ் மக்களுக்கு எதிராக கையாளும் நேரடி இனவொடுக்கு முறை என்ற ஒரேயொரு விடயத்தில் மட்டுமே, மக்களின் கோரிக்கையுடன் புலிகள் துரதிஸ்டவசமாக இணைந்து நிற்கின்றனர். தமிழ் மக்களின் இந்த உடன்பாடு எதிரி மீதான புலிகளின் லும்பன் அரசியல் நடவடிக்கை மீது அல்ல. சிங்கள பாசீச இனவெறி அரசு தமிழ் மக்களின் எதிரி என்பதில், கொள்கை ரீதியாக மட்டுமே ஒன்றுபடுகின்றனர். ஏன் எதிரி என்ற உள்ளடகத்தில் மீது அல்ல. சிங்கள பாசீச இனவெறி அரசு தமிழ் மக்களின் எதிரி என்று கொள்கை ரீதியான உடன்பாடு தவிர, தமிழ் மக்களின் மற்றைய அனைத்து கோரிக்கையையும் பாசீச கரங்கள் மூலம் புலிகள் அடக்கியொடுக்குகின்றனர். தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமையை கோருவதையே துரோகமென்று முத்திரை குத்தி, கொன்று போடுகின்றனர். அரசுடனும், இந்தியா மற்றும் ஏகாதிபத்தியத்துடன் கூடிக்குலாவி காட்டிக் கொடுக்கும் தமிழ் குழுக்களின் துரோகம், இந்த உரிமைப்

www.tamilarangam.net



போராட்டத்தில் இருந்து முற்றாக வேறுபட்டது. தமிழ்மக்கள் தமது கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை கோருவதை, சுரண்டலையும், ஆணாதிக்கத்தையும், சாதிய ஒடுக்குமுறையையும் எதிர்த்து போராடுவதை, புலிகள் துரோகமாக முத்திரை குத்தி படுகொலை செய்வது, தமிழ் மக்களுக்கு எதிரான அப்பட்டமாக ஜனநாயகத்தை மறுக்கும் துரோகமாகும். சிங்கள இனவெறி அரசின் இடத்தில் தமிழ் குறுந்தேசிய ஜனநாயக மறுப்பு அதிகாரத்தை நிறுவுவதன் மூலம், தமிழ் மக்களை ஒட்டச் சுரண்டி அடக்கியாளும் அதிகாரத்தை பிரபாகரனின் தலைமையில் தம்மிடம் தரும்படியே புலிகள் கோருகின்றனர்.

இங்கு தமிழ் மக்களை அடக்கியாளும் சிங்கள இனவாதிக்குப் பதில், குறுந்தேசிய இனவாதத் தமிழனை (பிரபாகரனை) அதிகாரத்தில் ஏற்றுவதன் மூலம், தமிழ் மக்கள் மீதான சிங்கள இன ஒடுக்கு முறையை களைவதற்கு அப்பால் எதையும் பெற்றுவிடப் போவதில்லை. சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கும் இனவெறி அடக்குமுறை மட்டுமே, புலிகளின் ஆட்சியில் இல்லாது போகும். புதிய அடக்குமுறை தமிழன் தலைமையில், தமிழ் மக்களுக்கு இருப்பதை விட கோரமாக பரிசளிக்கப்படும். அதே நேரம் சுரண்டல், சாதிய கொடுமைகள், ஆணாதிக்கம் என்று அனைத்து அடக்கு முறையையும் புலிகள் பாதுகாத்து, மேலும் கூர்மையாக அடக்குமுறையை தமிழ் மக்கள் மேல் தொடர்ந்தும் கையாள்வர். அதை தனிச் சர்வாதிகார பாசீச நடைமுறை ஊடாகவே நிறுவிப் பாதுகாப்பர். இன்று இதன் பண்புகளை புலிகளின் அன்றாட அனைத்து நடைமுறைகளில் நாம் காணமுடியும்.

இனவெறி அரசுக்கு எதிரான புலிகளின் போராட்டத்தில் தமிழ் மக்களின் நலன்கள் என்ற ஒரு விடயத்தில் ஒன்றிணைந்து நிற்பதால் மட்டுமே, புலிகளை அரசியல் ரீதியாக தக்க வைக்கின்றது. இலங்கையில் இன முரண்பாடு முதன்மை முரண்பாடாக மாறியுள்ள நிலையில், அந்த முரண்பாட்டில் போராடும் சக்திகளை சரியாக மதிப்பிடுவது அவசியமாகும். இந்த வகையில் புலிகளின் மக்கள் விரோத பாசீச போக்குகளை கடுமையாக விமர்சிக்கும் அதேநேரம், இலங்கை அரசுக்கு எதிரான போரட்டத்தில் புலிகளின் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் எதிரிகளான அரசு மற்றும் அன்னிய தலையீட்டை நடத்த முனையும் எந்த சக்தியும், எந்த வடிவிலும் புலிகளை அழிப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஏனெனின் இன முரண்பாடு முதன்மை முரண்பாடாக தெளிவாக எமக்கு முன்னால் நிற்கின்றது. புலிகளின் பாசீச குறுந்தேசிய இனவாதத்தை அடிப்படையாக கொண்ட மக்கள் விரோத போக்கை முறியடித்து, மக்களின் அடிப்படை உரிமையை உள்ளடக்கிய போராட்டத்தை முன்னெடுக்க, இன முரண்பாட்டை கையில் எடுக்க வேண்டியுள்ளது இன முரண்பாட்டை கையில் எடுத்து போராடுபவர்களே புலிகளை அரசியல் ரீதியாக அழிப்பதன் மூலம், தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை உள்ளடங்கிய போராட்டத்துக்கு, புலிகளுக்கு பதிலாக தலைமை கொடுக்க வேண்டிய வரலாற்று கட்டத்தில் நிற்கின்றோம். இதை மீறி எந்த வரலாறும் சுயமாக இயங்கி விடுவதில்லை.

குறிப்பு: இக்கட்டுரை "வதை முகாமில் இருந்து தப்பிய தூக்கு மேடைக் கைதியின் நினைவுகள் அழிவதில்லை" என்ற இரயாகரன் எழுதி வெளிவராத நூலில் இருந்து, சமகால முக்கியத்துவம் கருதி இப்பகுதி தரப்படுகின்றது.

பி.இரயாகரன்

www.tamilcircle.net